Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 98 | வெள்ளிக்கிழமை 04 மார்ச் 2022 | மாசி 20 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

கொரோனா
நேற்று 711
மொத்தம் 6,48,410

உயிரிழப்பு
நேற்று 20
மொத்தம் 16,287



### அரசுக்குள் வெடித்தது பூகம்பம்

# விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில அமைச்சுப் பதவி நேற்றுப் பறிப்பு!

## அமைச்சரானார் எஸ்.பி.திஸாநாயக்க

கொழும்பு, மார்ச் 4

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் நிலையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அமைச்சரவையில் நேற்றுத் திடீர் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார். அரசாங்கத்துக்குள் இருந்தபடி குடைச்சல் கொடுத்து வந்த விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சுப் பதவிகளில் இருந்து அதிரடியாகத் தூக்கியெறியப்பட்டனர். 12




## "நன்றி"!

கொழும்பு, மார்ச் 4

கைத்தொழில் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட விமல் வீரவன்ச ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நன்றி தெரிவித்துள் 15

## பஸிலின் தாளத்துக்கு ஆடுகிறாரா கோத்தா?

### கொதிநிலையில் தெற்கு அரசியல்

கொழும்பு, மார்ச் 4

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பணிப்புக்கமைய அமைச்சரவையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், தெற்கு அரசியல் கொதிநிலையை அடைந்துள்ளது. இந்த மாற்றங்கள் பஸில் ராஜபக்ச தரப்பினரின் அழுத்தங்களையடுத்தே 15

### முச்சந்தி முரளி



"உவையள் போட்ட தாளத்துக்கும், ஆடின ஆட்டத்துக்கும் ராஜபக்ச கொம்பனிக்காரர் நல்ல பரிசு குடுத்திருக்கினம் கண்டியளோ...!"

## விண்வெளி நிலையம் 'அம்போ'! மேற்குநாடுகளுக்கு ரஷ்யா பதிலடி

### உக்ரைன் மீதும் கடும் தாக்குல்

லண்டன், மார்ச் 4

உக்ரைன்மீது ரஷ்யாவின் கடும் தாக்குதல்கள் நேற்றும் தொடர்ந்தன. உக்ரைனின் சில நகரங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றியுள்ளன என்றும், தலைநகர் கீவ் மற்றும் 2 ஆவது பெரிய நகரான கார்கீவ் ஆகியவை 12



## தொடரும் ஏழரை!

கொழும்பு, மார்ச் 4

இன்றும் நாடுமுழுவதும் ஏழரை மணித்தியாலங்களுக்கு மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபை முன்வைத்த கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் 15

## அழகியல் பாட பரீட்சை முடிவு வெளியானது!

கொழும்பு, மார்ச் 4

2020 ஆம் கல்வி ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் 15

**விபத்தில் விரிவுரையாளர் மரணம்**
விரிவு - பக்.2

## இலங்கையின் எதிர்காலம் இருட்டு

கொழும்பு, மார்ச் 4

இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலம் இருண்டதாக உள்ளது என்று 15

## ஐ.நா. அமர்வில் இன்று இலங்கை விவகாரம்!

ஜெனிவா, மார்ச் 4

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட் முன்வைத்துள்ள இலங்கை தொடர்பான எழுத்துமூல சமர்ப்பணம் தொடர்பில் இன்று நடக்கவுள்ள ஐ.நா. மனித 11

## எரிவாயு இறக்குமதிக்கு தடைபோடும் டொலர்!

### தட்டுப்பாடு தொடரும் அபாயம்



கொழும்பு, பெப். 4

வங்கிகள் நாணயக் கடிதங்களை வழங்க அனுமதிக்காததால் எரிவாயுவை 11

## இலங்கையின் தண்டனையின்மையை தட்டிக் கேட்கவேண்டும் சர்வதேசம்!

### கோருகிறார் சம்பந்தன்



யாழ்ப்பாணம், மார்ச் 4

இலங்கையின் தண்டனையின்மைக் கலாசாரமானது சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுசெல்ல வேண்டிய தருணத்தை எட்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### ஜெனிவா மனித உரிமைப்பேரவை அமர்வில்

# காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு இம்முறையாவது தீர்வு வேண்டும்

### உறவுகள் கோரிக்கை




**வவுனியா, மார்ச் 4**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இந்த முறை அமர்விலாவது, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை சர்வதேசம் மேற்கொள்ளவேண்டும் என்று வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் வலியுறுத்தியது.**

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம், தமது உறவுகளுக்கு நீதி கோரி நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்தது. இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்படி சங்கத்தினர் இவ்வாறு வலியுறுத்தினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டு, 10 வருடங்கள் கடந்த நிலையில், எமக்கான நீதி தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றது. தொலைத்த தமது பிள்ளைகளைக் காணாமல் சாட்சிகளான பல தாய்மார்கள் மரணித்து விட்டனர்.

வயது முதிர்ந்த நிலையில் அடுத்த போராட்டத்துக்கு வருவோமா என்ற நம்பிக்கை அற்ற நிலையில் இந்தப்போராடங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இலங்கையில் இனப்படுகொலை தொடர்ச்சியாக இடம்பெறாமல் தடுக்கப்பட வேண்டுமானால் ராஜபக்ச குடும்பமும், இனப்படுகொலைகளுக்கு பொறுப்பாக இருந்த படைத்தளபதிகளும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்படவேண்டும்.

சர்வதேச சமூகம் எமக்கான நீதியை விரைவில் வழங்கவேண்டும்.



இந்த முறை இடம்பெற்று வரும் ஜெனிவா மனித உரிமைப்பேரவை அமர்விலாவது உறுதியான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு, எமக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அதற்கு உறுப்பு நாடுகள் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டும். எமக்கான நீதி கிடைக்கும் வரையில் நாம் எமது போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவோம் -என்றனர். (ய-110)

# கச்சதீவுத் திருவிழாவுக்கு தமிழகத்திலிருந்து 50 பேர்

கொழும்பு, மார்ச் 4

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் தமிழகத்தைச் சேர்ந்த 50 பேர் மட்டுமே பங்கேற்கலாம் என்ற முடிவில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

திருவிழாவில் இலங்கையிலிருந்து 50 பேரையும், இந்தியாவில் இருந்து 50 பேரையும் மட்டும் பங்கேற்க அனுமதிப்பது என்று இலங்கை அரசு முடிவெடுத்துள்ளது.

இது தொடர்பில் இராமேஸ்வரம் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இரண்டு விசைப்படகுகளிலும், ஒரு நாட்டுப் படகிலும் 50 பக்தர்கள் சென்று கலந்து கொள்வது என்று முடிவு எடுக்கப்பட்டது. அதற்கமைவாக எதிர்வரும் 11ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இராமேஸ்வரம் துறைமுகத்தில் இருந்து படகுகள் புறப்படும். உளவுத்துறையும், கடற்படையும் கண்காணிப்பில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

### மன்னார் மாவட்டத்தில்

# பெப்ரவரி மாதத்தில் 560 தொற்றாளர்கள்

மன்னார் மாவட்டத்தில் கடந்த பெப்ரவரி மாதத்தில் 560 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 39 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 28ஆம் திகதி மாத்திரம் மன்னாரில் 24 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளனர்.

நானாட்டான் மருத்துவமனையில் 6 பேரும், மன்னார் பொது மருத்துவமனை, பேசாலை மற்றும் தலைமன்னார் மருத்துவமனைகளில் தலா 4 தொற்றாளர்களும் முருங்கன் மற்றும் எருக்கலம்பிட்டி மருத்துவமனைகளில் தலா 2 பேரும் விடத்தல்தீவு மற்றும் மடு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா ஒருவருமே இவ்வாறு தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளனர்.

மேலும் பெப்ரவரி மாதத்தில் கொரோனா முதலாவது தடுப்பூசியை 82 ஆயிரத்து 496 பேரும், இரண்டாவது தடுப்பூசியை 76 ஆயிரத்து 959 பேரும், பாடசாலை மாணவர்களில் முதலாவது தடுப்பூசியை 12 ஆயிரத்து 831 பேரும், இரண்டாவது தடுப்பூசியை 2 ஆயிரத்து 725 பேரும் பூஸ்டர் தடுப்பூசியை 35 ஆயிரத்து 943 பேரும் பெற்றுள்ளனர் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ச-60)

# 35ஆவது பட்டமளிப்பு ஆரம்பமானது நேற்று

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப்பட்டமளிப்புவிழா பல்கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமானது. இதில் 2 ஆயிரத்து 619 பேர் பட்டங்களைப் பெறுகின்றனர்.



கடந்த வருடம் நிகழ்நிலையில் பட்டங்கள் வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கு சம்பிரதாய பூர்வமாக பட்டங்களும், பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.



உயர் பட்டப் படிப்புகள் பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்ப பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம் மற்றும் யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை (தற்போதைய வவுனியாப் பல்கலைக்கழகத்தை) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. (ய-27)

# கோப்பாயில் விபத்து விரிவுரையாளர் சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 4

வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் மோதி விபத்துக்குள்ளான கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று மாலை 6.45 மணியளவில் இராசவீதி சேமக்காலை முன்பாக நடந்துள்ளது. கரவெட்டி மத்தியைச் சேர்ந்த கனகரத்தினம் பாஸ்கரன் (வயது-58) என்பவரே உயிரிழந்துள்ளார். விபத்தில் காயமடைந்த இவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன உரப்பாவனையால் நோய்த் தாக்கங்கள் அதிகம்

## இயற்கை உரமே சிறந்ததென ஆலோசனை



**கிளிநொச்சி, மார்ச் 4**

**இராசாயன உரப்பாவனையால், புதிய நோய்த்தாக்கங்களே ஏற்படும். பயிர்ச் செய்கைகளுக்கு இயற்கை உரங்களைப் பயன் படுத்தினால் கிடைக்கும் நன்மைகள் அதிகம் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற விவசாய குழுக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிராம மட்டங்களில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் மத்தியில், இயற்கை உரப் பயன்பாடுகள் தொடர்பிலும் அதனால் ஏற்படும் நன்மைகள் தொடர்பிலும் மேலதிகாரிகள் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். இயற்கை உரப்பயன்பாடு தற்போது ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது.

கடந்த போகத்தில் சேதனப்பசளைகள் உரிய காலத்தில் கிடைக்காமல் போயிருக்கலாம் அல்லது காலதாமதங்கள் ஏற்பட்டு இருக்கலாம். ஆனால் இனிவரும் காலங்களில் அவ்வாறு இல்லாமல் முன்கூட்டியே சேதனப் பசளைகள் கிடைக்கும்- என்றார். (ம-4-113)

# திறமையான வீரரை இழந்துள்ளது வடக்கு

## வவு. உதைபந்தாட்டச் சங்கம் கவலை

வவுனியா, மார்ச் 4


மன்னாரைச் சேர்ந்த உதைபந்தாட்ட வீரர் பியூஸ்லஸின் இறப்பு, வடக்கு மாகாணத்துக்கே பேரிழப்பு என்று வவுனியா மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் தலைவர் அ.நாகராஜன் தெரிவித்துள்ளார். பியூஸ்லஸின் இறப்புத் தொடர்பில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உதைபந்தாட்டத்தில் பல நுட்பங்களைக் கையாண்டு திறமையுடன் விளையாடும் சிறந்த வீரராக திகழ்ந்தவர் பியூஸ்லஸ். இலங்கை தேசிய அணியில் இடம்பிடித்த இவர், நாட்டுக்காக பல்வேறு போட்டிகளில் பங்கேற்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இரசிகர்களைக் கவர்ந்திருந்தார்.

வடக்கைப் பிரதிநித்துவப்படுத்தி தமிழ்பேசும் வீரராக தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பல்வேறு சாதனைகளை ஈட்டிவந்தார். அவரது இழப்பு உதை பந்தாட்டத்தை நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது - என்றுள்ளது. (ம-4,-110)



இலங்கை தேசிய கால்பந்தாட்ட வீரர் பியூஸ்லஸின் உடல் நேற்று அதிகாலை இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. நீர்கொழும்பு மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன. (ய-213)



# தேக்குமரக்குற்றிகள் கடத்தல்; ஒட்டுசுட்டானில் இருவர் கைது

முல்லைத்தீவு, மார்ச் 4

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் 10ஆம் கட்டை தேங்கங்காட்டுப் பகுதியில் பாரவூர்தி ஒன்றில் சட்டவிரோதமாக தேக்குமரங்களை வெட்டி ஏற்றிச்செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாங்குளம் வனவளத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்குக் கிடைத்த தகவலை அடுத்து சிறப்பு அதிரடிப் படையினரின் உதவியுடன் குறித்த பகுதிக்குச் சென்ற அதிகாரிகள் சட்டவிரோதமாக தேக்குமரங்களை அறுத்து பாரவூர்தியில் ஏற்றிச் செல்ல முற்பட்ட இருவரைக் கைதுசெய்துள்ளனர். அத்துடன் பாரவூர்தியையும் கைப்பற்றி மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-19)

# மயங்கி வீழ்ந்து மூதாட்டி இறப்பு

சாவகச்சேரி, மார்ச் 4

ஆட்டுக்குத் தண்ணீர் வைக்கச் சென்ற 72 வயதுடைய மூதாட்டி ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள் ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மட்டுவிலில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-9)

### சட்டவிரோதமாக

# மாட்டை இறைச்சியாக்கினரென மூவர் நேற்றுமுன்தினம் கைது!

மாட்டைத் திருடி இறைச்சியாக்கிய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2020ஆம் ஆண்டு அனலைதீவுப் பகுதியில் 48 ஆயிரம் ரூபா பெறுமதியான மாடு திருடப்பட்டதாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் மூவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்களிடம் மேலதிக் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. (ம-14-23, 27)




**இவ்வளவு நாளும் யாழ்ப்பாணத்தில தனிக் காட்டுராசாவா ஆட்டம் போட்ட கும்பலுக்கு அரசாங்கம் ஆப்பு வைக்க வெளிக்கிட்டிருக்கு. தங்களுக்கும் மேலிடத்துக்கும் நல்ல நெருக்கம் எண்டமாதிரிக் காட்டிக்கொண்டு, தாங்கள் சொன்னதையெல்லாம் அதிகாரிகள் செய்ய வேணும் எண்டும், தாங்கள் நினைச்ச இடத்துக்குத்தான் அரசாங்கம் குடுக்கிற அபிவிருத்திக்கான நிதியை விடுவிப்பம் எண்டும், என்ன புரோக்கிராம் எண்டாலும் தங்களுக்குதான் மேடையில முன்னுரிமை குடுக்கவேணும் எண்டும் உவையள் போடாத ஆட்டமேயில்லை. அற்பனுக்கு பவிசு வந்தால் அர்த்தராத்திரியில குடை பிடிக்காமல் வேற என்னதான் செய்யிறது?**

**இப்பிடிக் கனவுக்கார கும்பல் சொல்லுற எல்லாத்துக்கும் தலையாட்டுறதையே தன்ர பிறவிப்பெருங்கடனாக் கொண்டவர் எங்கட கச்சேரிப்பெரியவர். உண்மையில அந்த மனிசன் ஒரு அப்பிராணி. 'எதுக்கு வீண் சோலி? முரண்படாமல் இணங்கிப்போவம்' எண்டுதான் முதலில அவர் தலையாட்ட வெளிக்கிட்டவர். போகப்போக அந்தத் தலையாட்டலை மாத்தவே ஏலாமல், அதுவே அவரின்ர சுபாவமாகவே மாறிட்டுது. கனவுக்கார கும்பலும், அவர் எது சொன்னாலும், எப்பிடிச் சொன்னாலும் தலையாட்டுற அளவுக்கு - ரொம்ப நல்லவராகவே - இருக்கிற குணத்தை தனக்குச் சாதகமாகப் பாவிச்சு, கச்சேரி முழுக்க தங்கட கட்டுப்பாட்டுக்கை வைச்சிருந்தது. இந்தக் கும்பலின்ர ஆட்டத்துக்கு முதலில வீட்டுத்திட்ட விசயத்தோடதான் அரசாங்கம் நாணயக்கயிறு போட வெளிக்கிட்டது. அதுக்கு கொழும்பில இருந்து பிரதமரின்ர இணைப்புச் செயலாளரா இருக்கிறவரை இஞ்ச அனுப்பி, மோசடியளைக்கண்டு பிடிச்சு, ஏலும்மட்டும் சரியானபடி அந்தத் திட்டம் நடக்கிறதை அரசாங்கம் உறுதி செய்தது. இதால பிரதமரின்ர இணைப்புச் செயலாளரா இருக்கிற அந்தத் தமிழர், கனவுக்கார கும்பலின்ர ஜென்ம விரோதியா மாறிட்டார்.**

**இப்பிடி ஒரு நிலையிலதான், கிட்டடியில யாழ்ப்பாணத்தில உள்ள அந்தப் பிரபல கல்லூரியில கூடைப்பந்தாட்டப் போட்டி ஒண்டு நடந்தது. அதில பிரதமரின்ர இணைப்புச் செயலாளரும், கச்சேரிப் பெரியவரும் தான் விருந்தினர்கள். ரண்டுபேரின்ர பேரும் போட்டு அழைப்பிதழும் அடிச்சாச்சு. ஆனால் நிகழ்வு நடக்க முதல்நாள், ஏற்பாட்டுக்குழுவுக்கு கச்சேரிப் பெரியவர் போன் பண்ணி "அவசர கூட்டமொண்டுக்கு கொழும்பு போறன். அதால நிகழ்வுக்கு வர ஏலாது" எண்டு சொல்லியிருக்கிறார். ஆனால் அப்பிடி ஒரு அவசரக் கூட்டமும் கொழும்பில நடக்கவேயில்லையாம். அப்ப ஏன் அவர் வராமல் விட்டவர்? நிகழ்வுக்கு பிரதமரின்ர இணைப்பாளர் தானே இன்னொரு விருந்தினர். அவரோட சேர்ந்து பங்குபற்றினால், கனவுக்கார கும்பல் தன்னைப் பிழையா நினைச்சிடும் எண்டுதான் கச்சேரிப் பெரியவர் இப்பிடி ஒரு சாட்டுச் சொல்லி நிண்டவராம்.**

**ஆனால் விதி ஆரை விட்டது? இப்ப அதே இணைப்பாளர் , மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவில பிரதமரின்ர பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அப்ப இனி எந்த முகத்தோட அவர் கலந்துகொள்ளுற கூட்டங்களில கச்சேரிப் பெரியவர் வரப்போறார்? அதுக்கு கனவுக்கார கும்பல் அவருக்குப் பேச மாட்டினமோ?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்காளிக் கட்சிகள் பஸிலுடன் மோதல்!

கொழும்பு, மார்ச் 4

**நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கும், அரச பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையிலான மோதல் உக்கிரமடைந்துள்ளது.**

தற்போதைய நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கான யோசனைகள் அடங்கிய தேசிய வேலைத் திட்டமொன்றை 11 அரச பங்காளிக் கட்சிகள் கொழும்பில் நேற்றுமுன்தினம் வெளியிட்டன.

இதில் உரையாற்றிய அமைச்சர் விமல் வீரவன்ஸ, அத்துரலிய ரத்தன தேரர் ஆகியோர் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவை வெளிப்படையாகவே விமர்சித்தனர். அவர் அமெரிக்கப் பிரஜையென்பதையும் நினைவூட்டினர்.

தனக்குத்தான் எல்லாம் முடியும், மூளையுள்ளது, நிபுணர்களின் ஆலோசனை தேவையில்லை என்ற மனோநிலையில் செயற்படுபவர்களால் சவாலை எதிர்கொள்ள முடியாது. நாட்டில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், மத்திய வங்கி ஆளுநரால்கூட நிதி அமைச்சரைச் சந்திக்க முடியாவிட்டால், அதன் நோக்கம்தான் என்ன என்று அமைச்சர் விமல் சரமாரியாகத் தாக்குதலைத் தொடுத்தார். மைத்திரிபால சிறிசேன உட்பட ஏனைய தலைவர்களும் அரசின் செயற்பாடுகளை கடுமையாகச் சாடினர்.

பங்காளிக்கட்சிகளின் இந்தக் கூட்டத்தால் மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் கடும் சீற்றத்தில் உள்ளனர். அத்துடன் பொதுஜன பெரமுனவின் பரப்புரைக் கூட்டத்துக்கு பஸில் தரப்பு, பங்காளிக்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கவில்லை. எனவே, சுதந்திரக்கட்சியைத் தலைமையாகக்கொண்டு புதியதொரு கூட்டணியை அமைக்கவே பங்காளிக்கட்சிகள் முயற்சித்து வருகின்றன. இனிவரும் தேர்தல்களிலும் பங்காளிகள் தனிவழிப் பயணத்தையே மேற்கொள்ளும் என்று அறியமுடிகின்றது.

(ம-4,44)

# அனுதாபம் திரட்டும் முயற்சியில் அரசு

*ஏமாற வேண்டாமென ஜே.வி.பி. எச்சரிக்கை*



கொழும்பு, மார்ச் 4

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை வழங்கிவிட்டு, உள்நாட்டு அரசியல் நடத்துவதற்கும், அனுதாப அலையைத் திரட்டுவதற்கும் அரசு அரங்கேற்றும் நாடகத்தை நாட்டு மக்கள் நம்பக்கூடாது என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு ஆரம்பத்தில் கொரோனாவைக் காரணம் காட்டினர். தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு ரஷ்யா, உக்ரைன் மோதலைக்காரணம் காட்ட முற்படுகின்றனர். அடுத்ததாக ஜெனிவா விவகாரத்தையும் பயன்படுத்துகின்றனர்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இன்னும் நீதி நிலைநாட்டப்படவில்லை. எனவே, நீதிக்காகப் போராடுவதற்கான உரிமை பேராயருக்கு இருக்கின்றது. உள்நாட்டில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாததால்தான் அவருக்கு சர்வதேசத்தை நாட வேண்டி வந்தது. இதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்ததற்கான பொறுப்பை அரசு தான் ஏற்கவேண்டும்.

ஜெனிவாவில் அழுத்தங்கள் வந்தால் அதற்கான் பொறுப்பையும் அரசு ஏற்கவேண்டும். ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற இடமளித்துவிட்டு, அதனை வைத்து உள்நாட்டில் அரசியல் நடத்தும் நாடகம் 10 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. இனியும் மக்கள் ஏமாறக்கூடாது - என்றார். (ம-4,44)

# விமல், கம்மன்பிலவுக்கு எதிராக பின்வரிசை எம்.பிக்கள் களத்தில்

கொழும்பு, மார்ச் 4

அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் பங்கேற்கும் ஆளுங்கட்சி நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தைப் புறக்கணிப்பதற்கு ஆளுங்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

பின்வரிசை எம்.பிக்களுக்கு தலைமை தாங்கும் பிரமித் பண்டார தென்னக்கோன் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டம் மற்றும் ஆளுங்கட்சிக் கூட்டங்களின் போது மௌனம் காக்கும் விமல், கம்மன்பில போன்றவர்கள், ஊடக சந்திப்புக்கள் மற்றும் மாநாடுகளை நடத்தி தகவல்களை வெளிப்படுத்துகின்றனர். இதனால் அரசுக்கு நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. இப்படியானவர்கள் தொடர்பில் ஜனாதிபதி கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படும்வரை விமல், கம்மன்பில பங்கேற்கும் ஆளுங்கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தை புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அரச பங்காளிக் கட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் பங்கேற்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது. இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க, பிரமேநாத் தொலவத்த ஆகிய இருவருக்கும் எதிராகவே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ம-4,44)

# பெலாரஸிலுள்ள இலங்கையரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக

*பிரதமர் வலியுறுத்து*

கொழும்பு, மார்ச் 4

ரஷ்யாவுக்கும் - உக்ரைனுக்கும் இடையிலான போர் நிலைமையால், பெலாரஸில் உயர்கல்வி கற்கும் இலங்கை மாணவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ச மொஸ்கோவிலுள்ள இலங்கை தூதரகத்துக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

பெலாரஸ் அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் கல்விகற்கும் சுமார் ஆயிரத்து 500 இலங்கை மாணவர்களின் பெற்றோர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, பிரதமர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களுடன் கலந்துரையாடி சில வாரங்கள் கல்விப் பணிகளைத் தாமதிப்பது குறித்தும், அவர்களுக்கு ரஷ்யாவுக்கான நுழைவிசைவைப் பெற்று இலங்கைக்கு செல்வதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

(ம-4,இ)

# நாடுகளின் பிரதிநிதிகளுடன் பீரிஸ் குழுவினர் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 4

மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வில் கலந்துகொண்ட வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான இலங்கையின் உயர்மட்ட தூதுக்குழுவினர், பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

பாகிஸ்தான், பலஸ்தீனம், தென்னாபிரிக்கா, சவூதி அரேபியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளை பீரிஸ் தலைமையிலான குழுவினர் சந்தித்தனர். இலங்கையின் வெளியுறவுக் கொள்கை, சர்வதேச அரங்கில் இலங்கையின் நீண்டகால நட்புறவு, மனித உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலான இருதரப்பு ஒத்துழைப்பு, கல்வி, கலாசாரம், வர்த்தகம், சுற்றுலாத்துறை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன. (ம-4,இ)

# நாணய நிதியத்துடன் அடுத்த மாதம் பேச்சு

*உறுதிப்படுத்தினார் டிலான்*



கொழும்பு, மார்ச் 4

இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன், ஏப்ரல் மாதமளவில் பேச்சை ஆரம்பிக்கும் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான டிலான் பெரேரா நம்பிக்கை தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏப்ரல் மாதம் பேச்சு நடத்தப்படும் என்று நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அந்தத் தேர்வும் நல்லது. பேச்சு நடத்தவிருக்கும் வாய்ப்புக்களைத் தவறவிடக்கூடாது. சர்வதேச நாணய நியதித்தால் முன்வைக்கப்படும் நிபந்தனைகளை நாம் ஏற்காமல் இருக்கலாம். ஆனால், சர்வதேச நாணய நிதியத்தை நாடினால் சர்வதேச தரப்படுத்தல்களில் உரிய இடத்தை தக்க வைத்துக் கொள்ளலாம். ஏனெனில் சர்வதேச நிதி நிறுவனங்களின் பின்னணியிலும் மேற்குலக ஆதிக்கம் தான் நிலவுகின்றது - என்றார். (ம-4,44)

# இறுதிச் சடங்குகளில் கட்டுப்பாடுகள் தளர்வு



கொழும்பு, மார்ச் 4

இறுதிச் சடங்குகளில் கொரோனாத் தொற்றுக்கான சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றினால், பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் கொரோனாத் தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும், கொத்தணிகள் உருவாக்கம் காரணமாக தொற்று அதிகரிக்கும் இடங்கள் இன்னமும் உள்ளன. முன்னர் கொரோனா அல்லாத இறப்புச் சடங்குகளில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானோரே கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தது.

எனினும் நாட்டை மீளவும் திறப்பதற்கு சுகாதாரக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தவேண்டியுள்ளது. மதக் கொண்டாட்டங்கள் மற்றும் வழிபாடுகளில், சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களைப் பின்பற்றும் பட்சத்தில் அனுமதி வழங்கப்படுகின்றது. திருமண வைபவங்களை, மண்டபங்களில் வழக்கமான இடவசதியில் 75 வீதமானோருடன் நடத்தவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றார். (ம-4,ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த சிந்தனை

### பிறர் பணிகள்தான் நோன்பினது சிறப்பு

தவக்காலம் செப, தவ, தான, தரும நோன்புகளை சிறப்பாக மேற்கொண்ட மனமாற்றம் பெற அழைப்பு விடுக்கும் காலமாகும். புனிதர்கள் அல்லது மாமனிதர்கள் என்பவர்கள் சரியான செயல்களைச் சரியான மனநிலையோடு செய்பவர்கள். பாவிகள் தவறானவற்றைத் தவறான நோக்கோடு செய்பவர்கள். இரண்டுக்கும் இடையே சரியான செயல்களைத் தவறான மனநிலையோடும் தன்னல உள்நோக்கோடும் செய்பவர்களும் உள்ளனர். இதில் நாம் எந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் எனச் சிந்திப்போம்.
எசாயாவின் காலத்திலும் மக்கள் நோன்பிலிருந்து, சாக்கு உடை உடுத்தி, கட்டளைகளைக் கடைப்பிடித்து வந்தனர். இவற்றுக்குப் பின்னால் கடைந்தெடுத்த தன்னலம், லாபநோக்கம், அதிகார ஆதிக்கம் போன்ற முகமூடிகளை அணிந்திருந்தனர். இந்த வெளிவேட நோன்பு முறைகளை இறைவன் வன்மையாக சாடுகின்றார். கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், பசித்தோருக்கு உணவையும், உடையற்றோருக்கு உடையும், தங்க இடமில்லாதோருக்கு ஆதரவும், உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளா திருப்பதும்தான் நான் விரும்பும் நோன்பு என இறைவன் நோன்புக்கு புது அர்த்தம் கொடுக்கின்றார். நோன்பைக் கொச்சைப்படுத்தாது அனுசரிப்போம். தன்னைக் கடந்து தன்னையே மறந்து பிறர் வாழ தன்னையே பலியாக்குவதுதான் உண்மையான நோன்பு. சத்தமில்லா சபதம் ஏற்று, நல்ல செயல்கள் ஆற்றுவதே நோன்புக்கான சிறந்த இலக்கணம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

# குப்பைத் தொட்டியாக அல்லிராணிக் கோட்டை

மன்னார், மார்ச் 4

**மன்னாரில் தமிழர்களின் கலாசார சின்னமாகக் கருதப்படும் அல்லிராணிக் கோட்டை குப்பைத் தொட்டியாக மாறிவருகின்றது என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.**



பல மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்டுவரும் நிலையில், குறித்த கோட்டைப்பகுதி கடலரிப்பால் பாதிக்கப்பட்டு பராமரிப்பின்றிக் காணப்படுகின்றது. அத்துடன் வெளி இடங்களில் இருந்து குறித்த பகுதியில் குப்பைகளும் போடப்பட்டு வருகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே துறைசார்ந்த அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, குறித்த கலாசார சின்னத்தைப் பேணிப்பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14,213)



முல்லைத்தீவு குமாரபுரம் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் விசேட சிவராத்திரி பூசை வழிபாடுகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. (ம-4,246)



## ஆலய உண்டியல் திருட்டு இரு சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 4
ஆரியகுளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் உண்டியலை உடைத்து திருடினர் என்ற குற்றச்சாட்டில், நாவற்குழியைச் சேர்ந்த இருவர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
ஆலய வளாகத்தில் உள்ள உண்டியல் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணம் திருடப்பட்டமை தொடர்பில், ஆலய நிர்வாகத்தினரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளையடுத்து இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-4,26,27)



## யாழ். ஆஸ்பத்திரி வீதி அகலிப்பு

### *அதிகாரிகள் கலந்தாய்வு*

யாழ்ப்பாணம், மார்ச் 4
யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியின் அகலிப்பு தொடர்பில், யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் கலந்துரையாடப்பட்டது.
வாகனத்தரிப்பிடம், பொதுமக்களுக்கான நடைபாதை மற்றும் வடிகால் ஆகிய வசதிகளுடன் வீதியை அகலிப்பது தொடர்பான செயற்றிட்டம் இறுதி செய்யப்பட்டது. அதற்கான பணிகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படும்.
யாழ்.பொதுசன நூலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், மாநகர ஆணையாளர், யாழ்ப்பாண பிரதேச செயலர், தேசிய நீர்வழங்கல் அதிகார சபை அதிகாரிகள், நகரத் திட்டமிடல் அதிகார சபை அதிகாரிகள், இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை தொலைத்தொடர்புத் திணைக்கள அதிகாரிகள் யாழ்ப்பாண வர்த்தகர் சங்கத்தினர் ஆகியோர் பங்கேற்றனர். (ம-4,20)

## இலங்கை மீனவர்களுக்கு மியான்மரால் மன்னிப்பு

கொழும்பு, மார்ச் 4
மியான்மரின் யூனியன் தினத்தை முன்னிட்டு, சிறையிலுள்ள 7 இலங்கை மீனவர்களுக்கு, அந்த நாடு மன்னிப்பு வழங்கியுள்ளது.
மியான்மர் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்ததால், இலங்கை மீனவர்கள் 7 பேர் கடந்த வருடம் கைது செய்யப்பட்டனர். மீனவர்கள் யாங்கூனில் உள்ள இன்செயின் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.
இந்த நிலையில் மனிதாபிமான அடிப்படையில் மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். நாளை மறுதினம் அவர்கள் நாடு திரும்பவுள்ளனர் என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-4,இ)

## மோட்டார் சைக்கிள் – பஸ் விபத்தில் பிரதேச செயலக அலுவலர் காயம்!

சாவகச்சேரி, மார்ச் 4
மோட்டார் சைக்கிள் - பஸ் விபத்தில் சாவகச்சேரி பிரதேச செயலக அலுவலர் காயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் கொடிகாமம் பெரிய நாவலடி ஏ-9 வீதியில் நேற்று இடம் பெற்றது.
குறித்த அலுவலர் மோட்டார் சைக்கிளில் [illegible] தான வீதிக்குள் நுழைந்தபோது அவ்வழியே வந்த பஸ் மோட்டார் சைக்கிளை மோதியதில் விபத்து இடம்பெற்றது.
விபத்தில் குலச்சந்திரன் (வயது - 55) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14,9)

## 12 வர்த்தகர்களுக்கு நீதிமன்றில் தண்டம்

மன்னார், மார்ச் 4
காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் 12 வர்த்தகர்களுக்கு நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டது.
மன்னார் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளால், மன்னார் வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையில் 12 வர்த்தகர்கள் அகப்பட்டனர்.
விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலைக்கு பொருள்களை விற்றமை, காலாவதியான உணவுப் பொருள்களை விற்றமை போன்ற குற்றச்சாட்டுக்களுடன், மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வழக்குத் தொடரப்பட்டது. வர்த்தகர்கள் குற்றங்களை ஏற்றுக் கொண்டதை அடுத்து, ஒவ்வொருவருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா தொடக்கம் 5 ஆயிரம் ரூபா வரை தண்டம் விதிக்கப்பட்டது. (ம-4,60)

### வடக்கு மாகாணத்தின்

## சட்டம், ஒழுங்கு தொடர்பில் கொழும்பில் கலந்துரையாடல்

வடக்கு மாகாணத்தின் சட்டம், ஒழுங்கு தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுடன் கலந்துரையாடல் கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.
இதன்போது வடக்கு மாகாணத்தின் சட்டம், ஒழுங்கு தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடலில் பொலிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் பங்குபற்றினர். (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்துக்கு பாதுகாப்புப் பிரிவின் அறிக்கை

# தமிழர்களை அதிகம் பாதிப்பதாக உள்ளது

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 4**

**வெளிநாடுகளிலிருந்து விவாகப் பதிவுக்காக இலங்கைக்கு வருவோருக்கு தேசியப் பாதுகாப்பைக் காரணம்காட்டி, அந்தந்த நாடுகளில் பாதுகாப்புத்துறையின் தடையில்லா சான்றிதழ் பெறவேண்டுமென்று குறிப்பிட்டுள்ள அறிக்கையானது இலங்கையிலுள்ள தமிழ் இளைஞர், யுவதிகளையும் புலம்பெயர் தேசத்திலுள்ள இளைஞர், யுவதிகளையுமே அதிகம் பாதிப்பதாக உள்ளது என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.**

நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்;



இந்தச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் எவையும் சிங்கள மக்களின் திருமணச் சடங்குகளில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை. மாறாக இலங்கையில் வாழும் தமிழர்களையும், புலம்பெயர் நாடுகளில் வதியும் தமிழர்களையுமே பாதிப்பதாக அமைந் துள்ளது.

இந்தச் சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துவதன்மூலம் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள், அதிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கு, மத்திய மற்றும் மேல் மாகாணங்களிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில்வாழும் இளைஞர், யுவதிகள், தத்தம் பண்பாடு, கலாசார, மரபியல் அடையாளங்களை ஒத்தவர்களை திருமணம் செய்ய முடியாத அபாய நிலையே உருவாக்கப்படும்.

வெளிநாடுகளிலிருந்து விவாகப் பதிவுக்காக இலங்கைக்கு வருகைதரும் தமிழ் இளைஞர், யுவதிகள், இலங்கையின் தேசிய பாதுகாப்பைக் காரணம்காட்டி, தமது விவாகப் பதிவு களை மேலதிக மாவட்டப் பதிவாளர் மூலமே மேற்கொள்ளவேண்டுமென்பதும், ஆறு மாத காலத்தினுள் தாம் வதியும் நாட்டின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரியால் குறித்த நபர் குற்றவாளியல்லர் என்பதை சான்றுறுதிப்படுத்தி வழங்கப்படும் பாதுகாப்புதடை நீக்கல் அறிக்கையை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டுமென்பதும், இந்தியாவிலிருந்து வருகைதந்து இலங்கையின் மத்திய மற்றும் மேல் மாகாண உறவுகளைத் திருமணம் செய்பவர்களையே அதிகம் பாதிப்பதாக அமைந்துள்ளது.

ஏற்கனவே, மத்திய மற்றும் மேல் மாகாணங்களில் வாழும் தமிழர்கள் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளில் மொழிரீதியான ஆதிக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள்.

இலங்கையின் பிறப்புக்கள் மற்றும் இறப்புக்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிறப்பு, இறப்புப் பதிவுகளை தத்தம் தாய்மொழிகளிலேயே பதிவுசெய்ய வேண்டுமென்ற உரித்து வழங்கப்பட்டிருந்தும், அதனைமீறி மேற்படி பதிவுகள் பெரும்பாலும் தனிச்சிங்கள மொழியிலேயே மேற்கொள்ளப்படுவதால் பல தமிழ்க் குழந்தைகளின் பெயர்கள் தவறான அர்த்தப்படுத்தல்களுக்கும், தவறான உச்சரிப்புக்களுக்கும் உட்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்கமுடிகிறது.

இவ்வாறான சூழலில், ஏற்கனவே பல்வேறு வழிகளிலும் வஞ்சிக்கப்பட்டுவரும் தமிழர்களின் இயல்பான வாழ்வில் தாக்கம் செலுத்தும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள 18/2021ஆம் இலக்க சுற்றறிக்கையை மீள்பரிசீலனை செய்து, இந்த நடைமுறைமூலம் தமிழர்களும், கிராமிய விவாகப் பதிவாளர்களும் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ம)

# டீசல் பவுஸருக்கு அமோக வரவேற்பு

கொழும்பு,மார்ச் 4

எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு, டீசலை ஏற்றிய பவுஸர் வருவதைக் கண்ட மக்கள், அதற்கு அமோக வரவேற்பு அளித்தனர். இந்தச் சம்பவம் தங்காலை, மஹாவெலைப் பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது. பட்டாசு கொளுத்தியும், கைதட்டியும், ஆரவாரம் செய்தும் மக்கள் பவுஸரை வரவேற்றனர்.

அங்கு டீசல் பெறுவதற்காக சுமார் 12 மணித்தியாலங்கள் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். (ஒ-4-இ)

ரஞ்சனுக்காக

# சர்வதேசத்தை நாடியது ஐ.ம.ச.

கொழும்பு, மார்ச் 4

'ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதால் அவருக்கு நீதியை பெற்றுக்கொடுக்குமாறு சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்திடம் ஜெனிவாத் தொடரின்போது கோரிக்கை விடுக்கப்படும்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர்பில் பங்கேற்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி யின் சார்பில் ஹரின் பெர்னாண்டோ, மனுச நாணயக்காரவும் ஜெனிவா சென்றடைந்தனர். அங்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுப்படுத்திய ஹரின்,

ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காக நாம் செய்ய வேண்டிய அனைத்து விடயங்களையும் செய்வோம். அவருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. எனவே, அதுதொடர்பில் சர்வதேச நீதிமன்றம், சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியம் ஆகியவற்றுக்குத் தகவல்களை வழங்கவுள்ளோம். ரஞ்சனின் மனித உரிமை மீறப்பட்டுள்ளது.

ரஞ்சனுக்கு உள்நாட்டில் நீதி கிடைக்கவில்லை. இலங்கை சர்வதேச உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது. எனவே, அதன் ஊடாகவேனும் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கே முயற்சிக்கின்றோம். அத்துடன், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் அழுத்தக் குழுக்களுக்கும் தகவல்கள் வழங்கப்படும் - என்றார். (ம-44)

# சி.பி.எல். கிரிக்கெட் தொடரில் வடக்கின் வல்லூறுகள் மகுடம்



சம்பியன் கிண்ணத்தோடு வடக்கின் வல்லூறுகள் அணி

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கிடையே நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் தொடரில் வடக்கின் வல்லூறுகள் அணி சம்பியனானது.

வருடாந்தம் நடைபெறும் சி.பி.எல். எனப்படும் கூட்டுறவு பிறிமியர் லீக்கின் நான்காவது தொடர் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. மட்டுப்படுத்தப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இந்தத் தொடரின் 'ஏ' பிரிவில் முல்லை முத்துக்கள், கிளிநொச்சி கில்லிகள் ஆகிய அணிகளை வீழ்த்திய வடக்கின் வல்லூறுகள் அணி அரையிறுதிக்குத் தகுதிபெற்றது. அரையிறுதியில் யாழ். யாளிகள் அணியை வீழ்த்தி, இறுதிப் போட்டிக்கு வடக்கின் வல்லூறுகள் முன்னேறியது.

'பி' பிரிவில் முதல் சுற்றுப் போட்டிகளில் யாழ். யாளிகள், வவுனியா வைரங்கள் அணிகளைத் தோற்கடித்து அரையிறுதிக்குத் தகுதிபெற்ற மன்னார் மன்னர்கள் அணி, முல்லை முத்துக்கள் அணியை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியது.

பரபரப்பான இறுதிப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மன்னார் மன்னர்கள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத்தீர்மானித்தது.

துடுப்பெடுத்தாடிய வடக்கின் வல்லூறுகள் அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 விக்கெட் இழப்புக்கு 41 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிருசாந் 13 ஓட்டங்களையும் பிரதீஸ்குமரன் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். பந்து வீச்சில் நிசாந்தன் 2 விக்கெட்டுக்களையும் குருபரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் மன்னர்கள் அணி 3 விக்கெட் இழப்புக்கு வெறும் 32 ஓட்டங்களையே பெற்று, 9 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.



இரண்டாம் இடம்பெற்ற மன்னார் மன்னர்கள் அணி

இதில் நிசாந்தன் 14 ஓட்டங்களையும், பாலரவி 11 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். பந்து வீச்சில் பிரதீஸ்குமரன் 2 விக்கெட்டுக்களையும் பவள்ராஜ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக பிரதீஸ்குமரனும், தொடராட்ட நாயகனாகவும், தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் வடக்கின் வல்லூறுகளின் செல்வரஞ்சனும், தொடரில் சிறந்த பந்து வீச்சாளராக மன்னார் மன்னர்களின் நிசாந்தனும் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றிபெற்ற அணிகளுக்கான கிண்ணங்களை யும் பணப்பரிசில்களையும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மு.நந்தகோபாலன் வழங்கி வைத்தார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தடைகளும் டொலர்களும்

நாட்டில் என்றுமில்லாதவாறு டொலர் தட்டுப்பாடு, பொருளாதார நெருக்கடி என்பன தாண்டவமாடும் நிலையில், அத்தியாவசியமற்ற மேலும் 600 பொருள்களை இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. ஜனாதிபதி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அவசர உயர்மட்டக் கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எட்டப்பட்டிருக்கின்றது.

நாட்டில் இன்று எரிபொருள் தட்டுப்பாடு தலையெடுத்து ஆடுகின்றது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கண்ணுக்கெட்டிய தூரம்வரை வாகன அணிவகுப்பைத்தான் காணக்கூடியதாக உள்ளது. போக்குவரத்துத்துறை கிட்டத்தட்ட முடங்கிப்போயுள்ளது, இவற்றைவிட மின்தடை கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஒருநாளின் 24 மணிநேரத்தில் ஏறத்தாழ மூன்றில் ஒருபகுதி அதுவும் மக்களுக்கு மின்சாரம் அவசியமாகத் தேவைப்படும் காலப்பகுதியே சாரமாரியான மின்வெட்டுக்கு உள்ளாகின்றது. டொலருக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுதான் இவற்றுக்கெல்லாம் முதன்மையானதும் தீவிரமானதுமான காரணம்.


டொலருக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பற்றாக்குறையால், நாளுக்குநாள் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுவரும் நிலையில், டொலர் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்வதற்கு உரிய பரிசீலனைகளை மேற்கொள்ளவேண்டியது காலத்தேவையானது. இறக்குமதி இருந்தால்தானே டொலர் வெளியில் செல்லும். அதனால்தான் அத்தியாவசியமற்ற பொருள்கள் என்று 600 பொருள்களைப் பட்டியலிட்டு இந்த இறக்குமதித் தடை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது என்று அரசாங்கம் சிந்திக்கின்றது. ஆனால், அப்படி ஒற்றைத்தனமான சிந்தனையால் இன்னும் பிரச்சினைகள் பெருகுமே தவிர குறையப் போவதில்லை.

இனி இறக்குமதிக்குத் தடை செய்யப்பட்ட மேற்படி பொருள்களின் வரத்து நின்றுபோகும். அதேநேரம் அந்தப் பொருள்களுக்காக வெளிச்செல்லும் டொலர் இருப்பாகத் தொடர்ந்து பேணப்படும். அதை, எரிபொருள் கொள்வனவுக்கோ அல்லது பிறிதேதும் அத்தியாவசியப் பொருள் கொள்வனவுக்கோ பயன்படுத்தலாம். இதுதான் அரசின் வியூகம். ஆனால், இது எந்தளவுதூரம் சரியானது? இந்தத் திட்டத்தால் எவ்வளவு காலம்தான் தாக்குப்பிடிக்க முடியும்? எதிலும் தற்காலிகத் தீர்வுகளை நாடியோடும் அரசாங்கம் இப்போதும்கூட அதையேதான் செய்துள்ளது. இறக்குமதிகளுக்குத் தடைவிதித்து அதனால் சேமிக்கப்படும் டொலர் ஒருபோதும் நிரந்தரத் தீர்வைத் தராது. இதற்கு முன்னரும்கூட இவ்வாறான ஏகப்பட்ட இறக்குமதித் தடைகளை கடந்த சில வாரங்களிலேயே இந்த நாடு கண்டுள்ளது. அதன் தொடர்ச்சிதான் இது. இத்துடன் இது முடிந்துபோகப்போகும் விடயமும் அல்ல.

இறக்குமதிகளுக்கு விதிக்கப்படும் தடைகளால் நாட்டில் டொலர் இருப்பை சீராகப் பேணமுடியுமென்றால் இவ்வளவு காலமும் விதிக்கப்பட்ட பலநூறு பொருள்கள் மீதான தடையால் ஆன பயன்தான் என்ன? இலங்கைக்குத் தற்போது டொலரை ஈட்டுவதற்குரிய பொறிமுறைகள்தான் தேவையாகவுள்ளன. டொலரை ஈட்டுவதற்குப் பதிலாக, இறக்குமதிகளுக்கு விதிக்கப்படும் தடைகள் மூலமாகத் தற்காலிக இருப்பைத் தக்கவைக்க முனைந்தால் அதன் விளைவுகள் இன்னுமின்னும் மோசமாகும். பொருள்களுக்கு ஏற்படும் தட்டுப்பாடால் கேள்விகள் அதிகரிக்கும், இதனால் விலையேற்றங்கள் வானைத் தொடும். ஏற்கனவே விலையேற்றங்களால் நொந்துபோயுள்ள மக்களை மேலும் வாட்டிவதைக்கும் வகையில்தான் இந்த அரசாங்கத்தின் நகர்வுகள் அமைகின்றன. மீட்சி தருகின்றோம் என்ற போர்வையில் இந்த அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நகர்வும் படுகுழியை நோக்கியே நாட்டையும் மக்களையும் அழைத்துச் செல்கின்றது.

## நாளொரு நல்வார்த்தை

"மிகச் சிறந்த வேலையைச் செய்வதற்கான ஒரேவழி, நீங்கள் செய்வதை நேசித்துச் செய்வதாகும்"
- ஸ்டீவ் ஜொப்ஸ்




# பெருமளவு கைக்குண்டுகள் முள்ளிவாய்க்காலில் மீட்பு!

**முல்லைத்தீவு, மார்ச் 4**

**முள்ளிவாய்க்கால் பகுதியில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் ஏராளமான கைக்குண்டுகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.**



முள்ளிவாய்க்கால் கிழக்கு சனசமூக மண்டபத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் காணியைத் துப்புரவு செய்துகொண்டிருந்த ஒருவரால் குறித்த கைக்குண்டுகள் இனங்காணப்பட்டதையடுத்து முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் ஆய்வை மேற்கொண்டபோது 176 கைக்குண்டுகள் மீட்கப்பட்டன. இதனையடுத்து அந்தப்பகுதிக்கு பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றின் உத்தரவு பெறப்பட்டு. அங்கு தொடர்ந்து அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-14,19)

# மனித உரிமை விவகாரத்தில் மேற்குலகம் இரட்டை வேடம்

## டிலான் ஆவேசம்

கொழும்பு, மார்ச் 4

மனித உரிமைகள் உட்பட இதர விடயங்களில் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் இரட்டை நிலைப்பாட்டையே கடைபிடித்து வருகின்றன என்று ஆளுங் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான டிலான் பெரேரா தெரிவித்தார். பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ட்ரம்ப் ஜனாதிபதியாக இருந்தபோது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை மலசல கூடக் குழியென விமர்சித்துவிட்டு அதிலிருந்து அமெரிக்கா வெளியேறியது. ஆனால் இன்று இலங்கைக்கு எதிராக அந்தச் சபையில் குற்றச்சாட்டு முன்வைக்கப்படு கின்றது. அவர்களுக்கு பிடிக்காத போது மலசல கூடமாக விளங்கும் இடம், பிடிக்கும் போது மாளிகையாக மாறி விடுகின்றது. இப்படியான இரட்டை நிலைப்பாட்டையே மேற்குலகம் பின்பற்றி வருகின்றது.

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சவாலுக்குட்படுத்தி எதிரணி எம்.பிக்கள் ஜெனிவா சென்றுள்ளனர். ரஞ்சன் ராமநாயக்க, ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கேட்டிருக்கலாம். அதைவிடுத்து இவர்கள் ஜெனிவா செல்வது ஏன்? இப்படியான எதிரணிதான் எமது நாட்டில் உள்ளது - என்றார். (ம-4,44)

நாளை 05.03.2022
சனிக்கிழமை
மாசி 21
சுபநேரம் : 03.26 – 04.56
ராகுகாலம்: 09.26 – 10.56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உறவினருடன் சமீபத்தில் ஏற்பட்ட குளறுபடிகள் அகலும். முன்னேற்றப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். சுபநிகழ்ச்சி பற்றிய செய்திகள் உங்களுக்கு சந்தோ ஷத்தை ஏற்படுத்தும்.

**இடபம்:** தன்னம்பிக்கையால் சாதிப்பீர்கள். கலகலப்பான நாள். தொழில் முன்னேற்றம் ஓரளவுக்கு உண்டு. பயம் நீங்கும். தன் பயத்தை கைவிட்டு சாதனைக்கு முயல்வீர்கள்.

**மிதுனம்:** அரசியல்வாதி ஒருவருடன் இன்று ஏற்படும் நட்பு பயன் தரும். மனதுக்குப்பிடித்தவரின் மன நிறைவால் மகிழ்ச்சி வந்து சேரும். முயற்சி வெற்றியடையும்.

**கடகம்:** குடும்பத்தினரின் செயற்பாடுகள் மனதுக்கு நிறைவு தரும். முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கு நிறையப் பாடுபடுவீர்கள். புதிய மனிதர்களை நம்பி எதையும் பேச வேண்டாம்.

**சிம்மம்:** உடல் நலத்துக்கு ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும் . புதியவரை நம்பிச் செயற்பட்ட விஷயம் நல்ல முடிவுக்கு வரும் . உறவினர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள்.

**கன்னி:** எதிர்பார்த்த செய்தி கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள். பல நாள் எதிர்பார்ப்பு ஒன்று இனிதே நிறைவேறும். உங்களுடைய வெளிவட்டாரப் பயணம் உறுதியான தகவலை தரும்.

**துலாம்:** மனதுக்குப் பிரியமான சிலரை சந்திப்பீர்கள். மனச்சோர்வு நீங்கும். எதிர்ப்புகளைச் சமாளித்து வெற்றிகரமாக நடை போடுவீர்கள். இன்று உறவினரிடம் பேசுவதால் மனதில் இருந்த சுமை குறையும்

**விருச்சிகம்:** நெருங்கிய நண்பர் ஒருவர் உங்கள் தேவையைப் பூர்த்தி செய்யலாம். பணியிட மாற்றம் உறுதி ஆகலாம். உடல்நலம் மேம்படும். மனதில் ஏற்பட்டிருந்த படபடப்பு நீங்கும். குழந்தைகள் வெற்றி அடைவர்.

**தனுசு:** எதிலும் அவசரம் வேண்டாம். வார்த்தைகளை கவனமாகக் கையாளுங்கள். பெற்றோரால் சங்கடம் ஏற்பட்டாலும் நன்மையும் உண்டாகும். சொத்து வாங்கும் விஷயத்தில் யோசித்து முடிவு எடுங்கள்.

**மகரம்:** குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் தீரும். மகிழ்ச்சி அதிகரிக்கும். எதையும் நிதானித்துச் செய்வீர்கள். மனதிடம் அதிகரிக்கும். வேற்று மொழி பேசுபவரால் நன்மை காண்பீர்கள்.

**கும்பம்:** நீங்கள் நல்ல நோக்கத்துடன் செய்யும் செயலை பிறர் விமர்சிப்பர். சகோதர, சகோதரிகளால் முன்பு ஏற்பட்ட கவலை நீங்கும். உடல் ஆரோக்கியத்தில் சிறு தொல்லை ஏற்பட்டு மறையும்

**மீனம்:** தொழில் செய்பவர்கள் கவனத்துடன் செயற்படுவது நல்லது. உற்சாக மனதுடன் பணியாற்றுவீர்கள். பிறரிடம் பாராட்டுப் பெறுவீர்கள். செலவுகளை குறைக்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

# எங்களை அழிப்பதே ரஷ்யாவின் நோக்கம்

## உக்ரைன் ஜனாதிபதி தெரிவிப்பு




கீவ், மார்ச் 4

உக்ரைன் நாட்டை அழிப்பதே ரஷ்யா வின் நோக்கம் என உக்ரைன் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ரஷ்யாவின் குண்டுவீச்சு மற்றும் வான் வழித் தாக்குதல்கள் மூலம் எங்கள் நாட்டை ரஷ்யா கைப்பற்றமுடியாது.

எங்கள் நாட்டுக்குள் படைகளை அனுப்ப ரஷ்யாவின் நட்பு நாடான பெலாரஸ் தயாராகி வருகின்றது. இதற்கு எங்களிடம் செயற்கைக் கோள் ஒளிப்பட ஆதார முள்ளது. மேலும் ரஷ்ய படையெடுப்பைத் தடுக்க பல மேற்கத்திய நாடுகள் ஆயுதங்கள் வழங்குவதாக உறுதியளித்துள்ளன. வெளிநாட்டிலிருந்து ஸ்டிங்கர் மற்றும் ஜெவெலின் ஏவுகணைகளை விரைவில் பெறவிருக்கிறோம். அத்துடன் துருக்கிய ட்ரோன்களுடன் மற்றொரு கப்பலும் நாட்டுக்கு வருகிறது- என்றார். (ச-இ)

# மரண அறிவித்தல்



பிறப்பு 11 . 09 . 1930

இறப்பு 28 . 02 . 2022

## செல்லையா நீக்கிலஸ் செல்வநாயகம்

(முன்னாள் றஞ்சித் கதிரை வாடகை - உரிமையாளர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நீக்கிலஸ் செல்வநாயகம் (28.02.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - வரோணிக்கா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை அலோசியஸ் நல்லையா - மரியம்மா செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி திரேசா (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், ஜோசப் மரியதாஸ், றெஜி ராஜேந்திரா, றெமிசியஸ் லோயலா, றேமன்போல், காலஞ்சென்ற யூட் றஞ்சித் மற்றும் யூடித்மேரி ஆன், றெனி றூபக்குமார், சிறில்றஞ்சித் ஆகியோரின் பாசமிகு தந்தையும், றோசா, ஜெசி மரினா, இவாஞ்சலின் சாந்தினி, உதயநந்தினி, மரினா, சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், குணரட்ணம், ஸ்ரனிஸ்லஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அக்னஸ், ஞானப்பிரகாசம், அன்ரனி மற்றும் அருள்பிரகாசம், லில்லி மாகிறற், அரியமலர் ஆகியோரின் மைத்துனரும், யோயல், யூலி, றபாயேல், றுக்சன், வாகீசன், விசாணி, சுபின், றொபின், கிறிஸ்ரீன், றஞ்சித், ஏஞ்சலின் அனிஷா, அனிஸ், அரிஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் மேரி அனா, மேரி ஜசிந்தா ஆகியோரின் பெரியதந்தையும், லிசி, நோவா, மில்லா, ஆரோன், திமியோ, ஜெய்லன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.03.2022) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.44, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
சிறில் - 021 222 9562
யூடி - 0033783324160

(CS 18677) 1/6)

## உக்ரைன் எல்லையில்

# அணுஆயுதங்களை குவித்தது ரஷ்யா



மொஸ்கோ, மார்ச் 4

**உக்ரைன் நகரங்களைப் பிடிக்க ரஷ்யா தீவிரத் தாக்குதலில் ஈடுபட்டு வரும் நிலையில், தற்போது எல்லையில் அணு ஆயுதங்களையும் குவித்துள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.**

இதில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள், வான்வெளித் தாக்குதல் நடத்த 34 சுகோய் போர் விமானங்கள் மற்றும் மிக்-31 மற்றும் மிக்-31 ஏ ரக போர் விமானங்கள் ஆகியவற்றுடன் ரஷ்யா தயார் நிலையில் உள்ளது.

மேலும் கடல் வழித் தாக்குதல் நடத்த போர்க் கப்பல்களும் அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் நீர்மூழ்கிக் கப்பல்களும் தயார் நிலையில் உள்ளன. இந்த அணு ஆயுதங்களைப் பயன்படுத்த ரஷ்ய ஜனாதிபதியின் உத்தரவு கிடைத்ததும் தாக்குதல் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அணு ஆயுதங்கள் வெடித்தால் அதன் தாக்கம் பல ஆண்டுகளுக்குத் தொடரும் எனக் கூறப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கனடா

# ஆசைகாட்டி இலக்குவைக்கப்படும் தமிழ் இளைஞர்கள்!

கனடாவுக்கு வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் சுற்றுலா நுழைவுவிசைவில் செல்ல முடியுமெனக் கூறிய கும்பல் ஒன்றிடம் தமிழ் இளைஞர்கள் பலர் ஏமாந்துள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கூறுகின்றனர். மேலும் பல இளைஞர்கள் ஏமாற்றமடையும் ஆபத்துக்கள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள கனடா விசாவுக்கு விண்ணப்பிக்கும் அங்கீகாரம் பெற்ற தனியார் நிறுவனத்துக்கு நேரடியாகச் சென்று விண்ணப்பங்களைக் கையளித்த பின்னரே இந்த ஏமாற்று வேலை இடம்பெறுகின்றது. இந்த ஏமாற்று நடவடிக்கைகளில் கனடா நுழைவிசைவுக்கு விண்ணப்பிக்கும் அங்கீகாரம் பெற்ற குறித்த தனியார் நிறுவன உயர் அதிகாரிகள் சிலருக்கும் தொடர்பிருப்பதாகவும் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் சந்தேகிக்கின்றனர்.

கனடாவில் வாழும் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் உறவினர்களும் இந்தக் கும்பல்களின் ஏமாற்று வேலைகளை அறியாமல், நேரடியாகவே அந்தக் கும்பல்களின் கைகளுக்கு முற்பணமாக பத்து லட்சம் ரூபாவை அனுப்புகின்றனர். முகவர்கள் மூலமாகவோ அல்லது வேறு வழிகள் ஊடாகவோ கனடாவுக்குச் செல்வதானால் குறைந்தது இலங்கை ரூபாவில் அறுபது அல்லது அறுபத்தைந்து இலட்சம்வரை பணம் செலுத்த வேண்டும். ஆனால் மேற்படி நுழைவிசைவில் கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறுகின்ற கும்பல் முற்பணமாகப் பத்து லட்சம் ரூபாவை மாத்திரமே பெற்றுக்கொள்கின்றது. வேறு சிலரிடம் இரண்டு லட்சம் ரூபாவையும், இன்னும் சிலரிடம் பத்து லட்சம் ரூபா முற்பணத்தையும் பெற்று, விசா வந்த பின்னர் மேலதிகமாக ஐந்து இலட்சம் வரையும் குறித்த கும்பல் பெறுகின்றது. மிகுதிப் பணத்தைக் கனடா போய்ச் சேர்ந்ததும் வழங்க முடியுமெனக் கூறுவதால் பல தமிழ் இளைஞர்கள் நம்பி ஏமாந்துள்ளனர்.

## நடப்பது இதுதான்

கனடாவுக்கோ அல்லது வேறு எந்த மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கோ செல்வதானால், கொழும்பில் உள்ள அந்த நாட்டுத் தூதரங்களினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்கள் நடத்தும் முகவர் அலுவலகங்களிலேயே விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். கனடா நுழைவிசைவைப் பெறுவதானால் முதலில் ஒன்லைன் மூலம் விண்ணப்பிக்கவேண்டும். பின்னர் விண்ணப்பித்தவரின் மின்அஞ்சலில் வரும் பதிலின் அடிப்படையில் நேரடியாகச்சென்று ஆவணங்களைக் கையளிக்க வேண்டும்.

அப்படிச் சமர்ப்பிக்கும்போது ஆவணங்களை அங்குள்ள உள்ளூர் அதிகாரிகள் பரிசோதிப்பர். அதாவது விண்ணப்பப் படிவத்தில் பெயர் விவரங்கள், முகவரிகள், மற்றும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு உரிய பதில் மற்றும் ஆவணங்கள் எல்லாமே சரியாக இருக்கின்றதா என்பதை மாத்திரமே அந்த அதிகாரிகள் உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்வர்.

அதே அலுவலகத்திலேயே மற்றுமொரு அதிகாரியிடம் சென்று தமது கண் மற்றும் விரல் அடையாளங்களை இயந்திரத்தில் பதிவு செய்ய வேண்டும். இந்த நடைமுறை சாதாரணமாக விண்ணப்பிக்கும் எல்லோருக்கும் உரிய ஒன்று. அவ்வாறு நேரடியாகச் சென்று விண்ணப்பித்த பின்னர் மின் அஞ்சல் மூலம் பெறப்படும் மற்றுமொரு பதிலின் அடிப்படையிலேயே விண்ணப்பித்த நபர் தனது கடவுச்சீட்டை குறித்த அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். ஒப்படைக்கப்பட்ட பின்னர் பற்றுச்சீட்டு ஒன்று வழங்கப்படும்.

(விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்பட்டால் மின் அஞ்சல் மூலம் தகவல் வரும். அப்படியானால் கடவுச்சீட்டை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமே இல்லை. இதுதான் குறித்த நிறுவனத்தின் உண்மையான நடவடிக்கை)

இரண்டு அல்லது மூன்று வாரங்களில் கடவுச்சீட்டை வந்து பெற்றுக்கொள்ளுமாறு கையடக்கத் தொலைபேசிக்குக் குறுந்தகவல் அல்லது மின் அஞ்சலில் தகவல் வந்த பின்னரே குறித்த அலுவலகத்துக்குச் சென்று கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளமுடியும். அப்போதுதான் உண்மை நுழைவுவிசைவு வந்துள்ளது என்பதை அறிய முடியும். கடவுச்சீட்டை ஒப்படைத்துவிட்டால் நுழைவு விசைவு 90 சதவீதம் உறுதியாகிவிடும். ஆனால், இங்கே ஏமாற்றப்படும் இளைஞர்களுக்கு இது புரிவதில்லை.

## கைமாற்றப்படும் போலி நுழைவிசைவு

இந்த இடத்திலேதான் நுழைவிசைவை (விசா) பெற்றுத் தருவதாகக் கூறுகின்ற கும்பல் தமது கைவரிசையைக் காண்பிக்கின்றது.

'நீங்கள் முழுப் பணத்தையும் தரவேண்டாம் விண்ணப்பத்தை நாங்களே நிரப்பியும் தருகின்றோம். நீங்கள் நேரடியாகச் சென்று விண்ணப்பங்களையும்- உரிய ஆவணங்களையும் மற்றும் கடவுச்சீட்டையும் கையளித்துவிட்டு அங்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டை எங்களிடம் தாருங்கள்' என்று கூறுகின்றது அந்தக்கும்பல்.

நுழைவிசைவுடன் கடவுச்சீட்டை வழங்கும்போது முற்பணமாகக் கொடுத்த பத்து லட்சம் ரூபாவுக்கு மேலதிகமாக இரண்டு லட்சம் ரூபாவை மாத்திரம் தந்தால்போதும், கனடவுக்குப் போய்ச் சேர்ந்த பின்னர் மிகுதிப் பணத்தை அனுப்புங்கள் என்றும் நம்பிக்கையாகக் கூறுகின்றது அந்தக் கும்பல். வேறு சிலரிடம் அந்தப் போலி நுழைவிசைவைக் கையளித்துவிட்டு முற்பணத்துக்கு மேலதிகமாக ஐந்து லட்சம் ரூபா வரையும் பெறப்பட்டிருக்கின்றது. விண்ணப்பித்த பின்னர் வழங்கப்படும் பற்றுச் சீட்டைக் காண்பித்து எவரும் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற அடிப்படையில், குறித்த பற்றுச்சீட்டைப் பெற்று குறுந்தகவல் அல்லது மின் அஞ்சல் வந்த பின்னர், அந்தக் கும்பல், கனடா நுழைவிசைவு வழங்கும் தனியார் நிறுவனத்துக்குச் சென்று கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்கின்றது.

நிச்சயமாக நுழைவிசைவு நிராகரிக்கப்பட்டிருக்கும் என்று அந்தக் கும்பலுக்குத் தெரியும். அத்துடன் கடவுச்சீட்டில் நிராகரிப்பு எனப் பதிவு செய்யப்படாமல் தாள் ஒன்றில் நிராகரிப்புக்கான இலக்கம் வழங்கப்பட்டிருக்கும்.

**நுழைவிசைவைத் தமது கடவுச்சீட்டில் கண்டதுமே, இளைஞர்கள் அறிவிழந்து இரண்டு லட்சம் ரூபா பணத்தை அல்லது அதற்கும் மேலதிகமான பணத்தை உடனடியாகக் குறித்த கும்பலின் கைகளில் நேரடியாகவே வழங்கியுள்ளனர். இப்படிச் சுமார் அறுபது இளைஞர்கள் ஏமாந்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.**

கனடாவுக்குச் செல்வதற்குரிய நம்பர் 2 ...னக் கூறப்படும் போலி நுழைவிசைவு ஒன்றை உண்மை ...ுழைவு விசைவு போன்று பதிவுசெய்து கடவுச்சீட்டை ...ளைஞர்களிடம் குறித்த கும்பல் வழங்கும்போது, இளை...ர்களுக்கு நம்பிக்கை பிறக்கின்றது. ஏனெனில் விண்ண...ப்பித்த பின்னர் ஆவணங்களுடன் கடவுச்சீட்டையும் நே...ரில் கொண்டு போய் கொடுத்து கண் மற்றும் விரல் அ...யாளங்களும் பெறப்பட்டதுதானே என்ற பலமான நம்பி...கை ஏமாற்றப்படும் இளைஞர்களுக்கு வருகின்றது.

இது போலி விசாவாக இருக்குமோ ...ன்று சிறுதுளி சந்தேகம்கூட அந்த இளைஞர்களுக்...கு ஏற்பட வாய்ப்பில்லை. அதனால் போலியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள நுழைவிசைவைத் தமது கடவுச்சீட்டில் கண்டதுமே, இளைஞர்கள் அறிவிழந்து இரண்டு லட்சம் ரூபா பணத்தை அல்லது அதற்கும் மேலதிகமான பணத்தை உடனடியாகக் குறித்த கும்பலின் கைகளில் நேரடியாகவே வழங்கியுள்ளனர்.

இப்படிச் சுமார் அறுபது இளைஞர்கள் ஏமாந்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. வேறு சில இளைஞர்களுக்கு விண்ணப்பத்தின் அடிப்படையில் துரதிர்ஷ்டவசமாக உண்மை விசா கிடைத்துக் கனடாவுக்குச் சென்றுமிருக்கின்றனர். ஆனால், அவ்வாறு சென்ற இளைஞர்களிடம் குறித்த கும்பல், ஏற்கனவே நிர்ணயித்த பணத் தொகைக்கு அதிகமாகவே பணத்தைப் பெற்றதாகவும் அறிய முடிகின்றது.

ஆகவே ஏமாறுகின்ற இளைஞர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். முன்பின் தெரியாத கும்பலிடம் எப்படி நேரடியாகப் பணத்தைக் கொடுக்கமுடியும்? வங்கிக் கணக்கு ஒன்றில் பணம் செலுத்தும் முறையிருந்தால், நிச்சயமாகப் பொலிஸாரிடம் முறையிட்டுச் சம்பந்தப்பட்ட நபரைக் கைது செய்யலாம், அல்லது ஏதுவும் நடவடிக்கை எடுக்கலாமல்லவா? அத்துடன் கனடாவுக்கு நுழைவிசைவு வழங்கும் குறித்த நிறுவனத்துக்கு நேரடியாகச் சென்று ஆவணங்களையும், கடவுச்சீட்டையும் கையளிக்க முடியு மென்றால், இரண்டு அல்லது மூன்று வாரங்களில் வருகின்றன குறுந்தகவலின் பின்னர் நுழைவிசைவு வழங்கப்பட்ட கடவுச்சீட்டை ஏன் நேரில் சென்று பெற முடியாது?

எந்த நம்பிக்கையோடு கடவுச்சீட்டை மீளப்பெறும் பற்றுச்சீட்டை முன்பின்தெரியாத அந்தக் கும்பலிடம் கையளிக்க முடியும்? இதுபற்றியெல்லாம் சிந்திக்காமல், எப்படியாகிலும் கனடாவுக்கு, அதுவும் குறைந்த செலவில் என்று ஆசைப்பட்டுப் புத்தி பேதலிக்கும் நிலைக்கு ஏன் இளைஞர்கள் செல்லவேண்டும்? என்று பாதிக்கப்பட்ட இளைஞர்களின் உறவினர்கள் பலரும் ஆதங்கப்படுகின்றனர். தூதரகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றுதான் நுழைவிசைவு வழங்குவதற்குரிய விண்ணப்பப் படிவங்களைச் சரிபார்த்துப் பெறுகின்றதே தவிர, கொழும்பில் உள்ள கனடாத் தூதரகம் அல்ல. இதனைக் கூடப் புரியாமல் கனடாத் தூதரகத்தில் விண்ணப்பித்ததாகப் பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் அப்பாவித்தனமாகத் தனது முறைப்பாட்டில் கூறியிருக்கிறார் என்பதுதான் வேடிக்கை.

## தனியார் நிறுவன அதிகாரிகளுக்கும் இந்த மோசடிக்கும் தொடர்பா?

கனடா நுழைவிசைவு வழங்கும் குறித்த தனியார் நிறுவன உயர் அதிகாரிகள் சிலருக்கும் இந்த ஏமாற்று வேலையில் சம்பந்தம் இருப்பதைப் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் சிலர் ஆவணங்களை நேரடியாக ஒப்படைக்கும்போது ஏற்பட்ட அனுபவத்தின் மூலம் உறுதிப்படுத்துகின்றனர்.

அதாவது அதிகாரிகள் சிலரின் நடத்தையை அவதானித்தே தொடர்பிருப்பதாக பாதிக்கப்பட்ட சில இளைஞர்கள் சந்தேகிக்கின்றனர். குறிப்பாக கடவுச்சீட்டை ஒப்படைக்கவும் என்று அனுப்பப்படும் மின் அஞ்சலில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்த ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபடும் கும்பலுக்குப் பின்னால் குறித்த நிறுவனத்தில் பணியாற்றும் சில அதிகாரிகள் மாத்திரமல்ல, அரசியல் செல்வாக்கும் இருப்பதாகப் பாதிக்கப்பட்ட வேறு சில இளைஞர்கள் கூறுகின்றனர்.

ஆகவே கொழும்பில் உள்ள கனடாத் தூதரகம் குறித்த தனியார் நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வடக்கு- கிழக்குத் தமிழ் இளைஞர்களே கூடுதலாக ஏமாற்றமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி : கூர்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் பெரும்போக அறுவடை இம்முறை குறைந்த விளைச்சலே!

கிளிநொச்சி, மார்ச் 4

**கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டு காலபோக அறுவடையில் குறைந்த விளைச்சலே பெறப்பட்டுள்ளது என்று மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பெரிய, நடுத்தர, சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் மானாவாரி பயிர்ச்செய்கை நிலங்கள் உட்பட சுமார் 69 ஆயிரம் ஏக்கர் முதல் 70 ஆயிரம் ஏக்கர் வரையான நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் நிறைவு பெற்று வருகின்றன. இந்த நிலையில் கடந்த காலங்களில் அறுவடைகள் மூலம் கிடைத்த விளைச்சலைவிட இந்த முறை குறைந்த அளவு விளைச்சலே கிடைத்துள்ளது. இதனால் விவசாயிகள் பெரிய இழப்பை எதிர்கொண்டுள்ளனர்.

இதுதொடர்பில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது, கடந்த காலப் போகங்களில் ஹெக்ரேயர் ஒன்றுக்கு 34 மெற்றிக்தொன் முதல் 45 மெற்றிக்தொன் வரையான விளைச்சல் கிடைத் திருந்தது.

இந்த ஆண்டுப் போகத்தில் ஹெக்ரேயர் ஒன்றுக்கு 2 மெற்றிக்தொன் முதல் 3 மெற்றிக்தொன் வரையான விளைச்சலே கிடைத்துள்ளது - என்று தெரிவிக்கப்பட்டது. (ம-14-113)

## உள்ளூராட்சி மன்றங்களின் பெண் பிரதிநிதிகளுக்கு தலைமைத்துவச் செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்களுக்கு, தேவைகளைக் கண்டறிதல் மற்றும் வளங்களை அடையாளப்படுத்தல் பற்றிய தொடர் பயிற்சியின் இறுதி நிகழ்வு யாழில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது பிரதேசசபை மற்றும் நகரசபைகளைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். பிரதேச சபை மற்றும் நகரசபைத் தவிசாளர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வு கற்றல் மற்றும் தலைமைத்துவத்தில் பெண்கள் எனும் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் உள்ளூராட்சிப் பெண்களின் இயலுமையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம், சேர்ச் போ கொம்ன்ட் கிரவுண்ட் நிறுவனம், மகளிர் அபிவிருத்தி நிலையம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஒழுங்கமைத்திருந்தன. (வ-20)



## கிராம வேலைத்திட்டங்கள் மன்னாரில் ஒன்றுகூடல்

மன்னார், மார்ச் 4

2022ஆம் ஆண்டு மாவட்ட ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பான ஒன்றுகூடல் மன்னாரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது கிராம மட்டத்தில் செய்யப்படவேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஒன்றுகூடலில், சாந்திபுரம், ஜீவபுரம், ஜிம்ரோன்நகர், பள்ளிமுனை, உப்புக்குளம் பகுதிகளைச் சேர்ந்த பெண்கள், நேசகரம் பிரஜைகள் குழுவின் அங்கத்தவர்கள், வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ-4-213)

## அங்குரார்ப்பணமும் ஒருங்கிணைப்பும்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ்ப்பாணம், வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழையமாணவர்கள் அமைப்பின் சர்வதேசக் கிளைகள் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் கற்று, புலம்பெயர் நாடுகளில் வாழும் பழைய மாணவர்களால் அமைக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றது.

கல்லூரியின் பௌதிக கட்டுமானங்களுக்கும், மனிதவள முகாமைத்துவத் துக்கும் வலுச்சேர்க்கும் முகமாகவும் தாய்ச்சங்கத்துக்கு மேலும் பலம் சேர்க்கக்கூடிய வகையில் இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

இந்த நடவடிக்கையின் ஒருபகுதியாக சுவிஸ், கனடா, பிரான்ஸ், லண்டன், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் பழைய மாணவர்கள் அமைப்பின் சர்வ தேசக் கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சர்வதேச நாடுகளின் பழைய மாணவர் சங்கங்களின் ஒருங்கிணைப்பாளராக சுப்பிரமணியம் மாதவன் கடந்தமாதம் 20ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டார். நிறைவேற்றுத் தலைவராக கல்லூரியின் அதிபர் வாசுகி தவபாலன் தெரிவானார். (ம-ய)

## சங்க இலாபம் அதிகரிப்பு ஆணையாளருக்குப் பாராட்டு!

முல்லைத்தீவு, மார்ச் 4

தமது சங்கத்தின் உற்பத்தியான ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட போத்தல்களில் அடைக்கப்பட்ட கள் விற்பனைக்கு, உறுதுணையாக இருந்து ஆலோசனைகளை வழங்கியமைக்காக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோருக்கு முல்லைத்தீவு மேற்கு பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளது.

தனியார் போத்தல் கள் இறங்குமதிக்கு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் விதித்த தடைகள் மற்றும் வரையறைகள் காரணமாகவே தம்மால் இந்த விற்பனை இலக்கையும் இலாபத்தையும் அடைய முடிந்தது என்றும் சங்க அங்கத்தவர்களின் வருமானத்தையும் அதிகரிக்க முடிந்ததாகவும் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)



சாவகச்சேரி பேருந்து நிலையத்தின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைய முன்னர் பொதுமக்கள் அதைப் பயன்படுத்தி வருகின்றனர்.

100 நகரங்கள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 20 மில்லியன் ரூபா செலவில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் சாவகச்சேரி பேருந்து நிலையம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் பேருந்துகள் உள்நுழையாதவாறு மறைப்புக் கட்டியிருந்த போதிலும் மக்கள் பேருந்து நிலையத்தைப் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது. (வ-9)

# தமிழர்களை பழிவாங்கும் சட்டமாகவே பயங்கரவாதத் தடைச்சட்டம் பாய்கிறது!

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

வவுனியா, மார்ச் 4

இலங்கையில் ரவிராஜ் கொலை வழக்கை இந்த அரசாங்கம் சரியாகக் கையாளவில்லை. நீதியை வழங்கவில்லை. கிருசாந்தியினுடைய கொலைக்கு இன்னும் சரியாக நீதி கிடைக்கவில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பழிவாங்குவதற்கான சட்டமாக அரசாங்கம் பயன்படுத்துகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழர்களை ஒடுப்பதற்காக அவர்கள் மீது ஏவப்பட்ட மிகக் கொடூரமான ஒரு சட்டமாகவே அமைந்திருக்கிறது. அதனால்தான் நாங்கள் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை இந்த மண்ணிலே இழந்திருக்கின்றோம். பல ஆயிரக்கணக்கான மக்களை இழந்திருக்கின்றோம். பல்லாயிரக் கணக்கான மக்களின் சொத்துக்களை இழந்துள்ளோம்.

எமது மண்ணில் மாவீரர்களை நினைவுகூர முடியாதவர்களாக, எமது உறவுகளை நினைக்க முடியாதவர்களாக, எங்களுக்காக போராடிய சங்கிலி மன்னன், பண்டாரவன்னியன், அக்கராயன் மன்னன் ஆகியோரை நினைக்க முடியாதவர்களாக இருக்கின்றோம்.

பயங்கரவாத தடைச் சட்டம் எங்கள்மீது பாய்கிறது. எதற்கெடுத்தாலும் பயங்கரவாத தடைச்சட்டம் என்ற பெயரில் அப்பாவி இளைஞர்கள் இன்றும் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

போருக்குப் பிற்பாடும் பல நூற்றுக் கணக்கனக்கான இளைஞர்கள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் கைது செய்யப்பட்டு அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

என்னுடைய காரியாலயத்தில்கூட 2013ஆம் ஆண்டு இலங்கைப் படைகளால் கைக்குண்டுகள், குண்டு செய்கின்ற பொருள்கள் கொண்டுவந்து வைக்கப்பட்டு, எமது காரியாலயத்தில் இருந்தவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 13 மாதங்கள் கேட்பார் இல்லாமல் விசாரணையின்றி இருந்தார்கள்.

ஆகவே இந்தக் கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டம் இலங்கையில் நீக்கப்பட வேண்டும் என்பதே எங்களது ஏகோபித்த குரல் - என்றார். (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்த்த விளைச்சலில்லை நட்டஈடு கோரும் விவசாயிகள்

மன்னார், மார்ச் 4

**முசலி அகத்தி முறிப்புக்குளத்தின்கீழ் இந்தமுறை பெரும்போக விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்ட விவசாயிகள், தமக்கு எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கப்பெறாமையால், அரசு நட்டஈடு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.**

சேதனப் பசளையைப் பயன்படுத்தி இந்த முறை குறித்த பகுதி விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

விவசாயி ஒருவர் சுமார் 7 ஏக்கரில் விதைப்பை மேற்கொண்டபோதும், 50 மூடைகள் நெல்லை விளைச்சலாகப் பெற்றுள்ளனர்.

ஒரு ஏக்கர் விவசாய செய்கையின் போது சுமார் 48 மூடைகள் நெல் கிடைப்பது வழமை. ஆனால் இந்த முறை ஒரு ஏக்கர் விவசாயச் செய்கைக்கு 7 மூடைகள் நெல் மாத்திரமே கிடைத்துள்ளது.

இதனால் நெல் வெட்டுக்கூலி மற்றும் வங்கியில் பெற்ற கடனை செலுத்த முடியாத நிலைமையில் உள்ளனர்.

முசலிப் பிரதேசத்தில் சுமார் 2 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பெரும்போக விவசாயம் செய்யப்பட்டுள்ளது. எனவே எங்களுக்கு யூரியாவை வழங்குவதற்கு முன்னர் நட்டஈட்டை அரசு வழங்க வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4,56)



## சங்குடன் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், மார்ச் 4

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெலிஞ்சிமுனை பகுதியில் சங்குகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 67 வயதுடைய நபரொருவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் புலனாய் வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய குறித்த நபரிடமிருந்து 160 சங்குகள் மீட்கப்பட்டன.

இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14-27)

## ஒப்பந்தகாலம் முடிந்தும் பாலப்புனரமைப்பு மந்தம்

கிளிநொச்சி, மார்ச் 4

கண்டாவளை பிரதேச செயலகத்துக்கு அருகிலுள்ள ஏ-35 பிரதான வீதியிலுள்ள பாலத்தின் ஒப்பந்தகாலம் முடிவடைந்தும், புனரமைப்புப் பணிகள் மந்தகதியில் இடம்பெறுகின்றன.



2020 ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட பாலத்தின் புனரமைப்புப் பணிகள் ஒப்பந்தகாலம் முடி வடைந்தும் இன்னும் நிறைவடையவில்லை.

இதனால் பாதசாரிகள் மற்றும் வாகனச் சாரதிகள் பாலத் தின் ஊடாகப் பயணிக்க முடியாதுள்ளனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு, பாலத்தின் புனரமைப்பை விரைவாகப் பூர்த்தி செய்து, மக்கள் பாவனைக்கு கையளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4,113)

## பங்குனி உத்தர லட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், மார்ச் 4

கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் பங்குனி உத்தர லட்சார்ச்சனை, எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் இடம்பெற்று 10 ஆவது நாளாகிய 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு 64 உபசார விஷேட பூசை வழிபாட்டுடன் லட்சார்ச்சனை நிறைவடைவதோடு உரும்பிராய் மேற்கு அன்னங்கை ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்திலிருந்து பால்குடபவனி ஆரம்பமாகும்.

17 ஆம் திகதி வியாழக்கிழமை 108 சங்காபிஷேகமும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆயிரத்து 8 சங்காபிஷேகமும் இடம்பெறும் என்று திருக்கோயில் பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ஒ-14)

## நிர்வாகத்தெரிவு

மன்னார், மார்ச் 4

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது.

இதன்போது தலைவராக சிவஸ்ரீ மஹா தர்மகுமார குருக்கள், பொதுச் செயலாளராக மன்னார் அமுதன், பொருளாளராக ஜனாப் க.மு.கலீம், நிர்வாகச் செயலாளராக ஜனாப் எஸ்.எச்.எம்.சிஹார், நிர்வாக உறுப்பினர்களாக ஜனாப் மு.மு. சபுறுதீன், எஸ்.ஜே.நிக்சன் குரூஸ், ஏ.எஸ்.மாக்ஸ் மில்லன் குரூஸ், ஏ.எஸ்.குயினி கிருபானந்தன், சிவ கௌரி புஷ்பராசன், எஸ்.ஏ.பெர்னாண்டோ, எஸ்.ரமேஷ், வி.எஸ். சிவகரன், மருத்துவக் கலாநிதி. கிறிஸ்தோபர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-14-60)

### முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### எரிவாயு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறக்குமதி செய்து விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று லிட்ரோ மற்றும் லாப்ஸ் எரிவாயு நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

லிட்ரோ நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயுடன் மூன்று கப்பல்கள் இலங்கை வந்துள்ளபோதும், நாணயக் கடிதங்களைத் திறந்து டொலரைச் செலுத்த முடியாத காரணத்தால் அவற்றை இறக்க முடியாதுள்ளது என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி தடைப்பட்டுள்ளதால் லிட்ரோ எரிவாயு நிறுவனம் எரிவாயு விநியோகத்தைத் தொழிற்சாலைகள் மற்றும் தகனச்சாலைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தியுள்ளது. சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட எரிவாயு இருப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது என்று தெரிவித்துள்ள அந்த நிறுவனம். விரைவில் அந்த விநியோகம் தடைப்படும் என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, லாப்ஸ் நிறுவனமும் எரிவாயு விநியோகத்தை இடைநிறுத்தியுள்ளது. தற்போதைய டொலர் நெருக்கடியால் தமது நிறுவனத்துக்கெனக் கொண்டு வரப்பட்ட எரிவாயுவை இறக்கி சந்தைக்கு விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அந்த நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ.கே.எச்.வேகபிட்டிய தெரிவித்துள்ளார்.

தற்போது சந்தையில் நுகர்வோருக்கு விற்பனை செய்வதற்கு எரிவாயு கையிருப்பில் இல்லை என்றும் அந்த நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

### ஐ.நா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகள் பேரவை அமர்வில் கலந்துரையாடப்படவுள்ளது.


அதேநேரம், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான இலங்கைத் தூதுக்குழுவினர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளரை நேற்றுமுன்தினம் சந்தித்துள்ளனர். அந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்துள்ள ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர், அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசமைப்பொன்றை உருவாக்கினால், இலங்கையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன, இலங்கையில் போர்க் குற்றங்கள் நடக்கவில்லை என்பது ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளருக்குத் தெளிவுபடுத்தப்பட்டது என்று கூறினார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள இலங்கை எடுத்துள்ள முயற்சிகளுக்கு பாராட்டுத் தெரிவித்த ஆணையாளர், அதில் மேலும் பல மாற்றங்கள் அவசியம் என்பதை வலியுறுத்தினார் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு உடனடியாகத் தடை விதிக்க வேண்டும் என்றும், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கு இணங்க அதை மீள்பரிசீலனை செய்து திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் வல்லுநர்கள் வலியுறுத்தியுள்ளனர். தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் வரை, பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதற்கு உடனடித் தடை விதிக்க வேண்டும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-எ-இ)

## மரண அறிவித்தல்

**தங்கராசா ஸ்ரீதர்** (ஸ்கைறோஸ் உரிமையாளர்)



புளியங்கூடலை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொட்டடியை வதிவிடமாகவும் கொண்ட தங்கராசா ஸ்ரீதர் (ஸ்கைறோஸ் உரிமையாளர்) அவர்கள் நேற்று (03.03.2022) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசா புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், சுபத்திரா அவர்களின் அன்புக்கணவரும், கௌதமன், பவித்திரன், அகிலன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வைரவர் கோவில், கூழாவடி ஒழுங்கை**
**கொட்டடி, யாழ்ப்பாணம்.**
**077 153 6914, 076 646 1089**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விண்வெளி...

இன்னமும் உக்ரைன் வசமே உள்ளன என்றும், அங்கு கடும் மோதல்கள் நடைபெற்று வருகின்றன என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 24ஆம் திகதி முதல் உக்ரைன் மீது கடும் தாக்குதல்களை ரஷ்யா நடத்திவரும் நிலையில், அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை வழங்குகின்றன. அதேநேரம் ரஷ்யா மீது தொடர் தடைகளையும் விதித்து வருகின்றன. இந்தத் தடைகளால் ரஷ்யப் பொருளாதாரம் ஆட்டம் காணும் என்று கூறப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் 'அணு ஆயுதப் போர் என்பது எங்கள் கையில் இல்லை. அது முழுக்க முழுக்க நேட்டோ படைகள் மற்றும் மேற்கத்திய நாடுகள் கைகளில் தான் இருக்கிறது' என்று ரஷ்யா தெரிவித்துள்ளது. இது ஐரோப்பிய நாடுகளுக்கான மறைமுக எச்சரிக்கையாகப் பார்க்கப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகள் தடைகளின் மூலம் ரஷ்யாவுக்கு நெருக்கடி கொடுக்க ஆரம்பித்துள்ள நிலையில், ரஷ்யாவும் பதிலடி கொடுக்க ஆரம்பித்திருக்கின்றது. ரஷ்யா சர்வதேச விண்வெளி நிலையப் பணிகளில் அமெரிக்காவுடனான அனைத்து உறவுகளையும் துண்டித்துக் கொள்வதாக அறிவித்துள்ளது. அமெரிக்காவுக்கான ரொக்கெட் இயந்திரம் வழங்குவதையும் ரஷ்யா நிறுத்தியுள்ளது. சர்வதேச விண்வெளி நிலைய பணிகளில் ஜப்பான், கனடா, அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஐரோப்பா இணைந்துள்ளன. அங்கு உலக விண்வெளி வீரர்கள் மற்றும் விஞ்ஞானிகள் குழுவினர் இணைந்து பல்வேறு ஆய்வுப்பணிகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்த ஒத்துழைப்பை முழுமையாகத் துண்டித்து கொள்வதாக ரஷ்யா அறிவித்திருப்பது பாரதூரமான விடயமாகப் பார்க்கப்படுகின்றது. இந்தப் பணிகளில் பெரும்பாலான தொழில்நுட்பங்கள் ரஷ்யாவின் கைகளிலேயே உள்ளன. பல கோடி டொலர் மதிப்பிலான ஆய்வுப்பணிகள் நடைபெற்றுவரும் சூழலில் ரஷ்யாவின் இந்த அறிவிப்பு உலக அளவில் விண்வெளி ஆராய்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை வழங்கிய சுவீடனின் வான்பரப்புக்குள் ரஷ்ய விமானங்கள் அத்துமீறிப் பறப்பில் ஈடுபட்டுள்ளன. பால்டிக் கடலில் சுவீடனுக்குச் சொந்தமான கொட்லான்ட் தீவின் கிழக்கு வான்பரப்பில் ரஷ்யாவின் போர் விமானங்கள் ஊடுருவ முற்பட்டதைச் சுவீடன் கண்காணிப்புப் போர் விமானம் ஒன்று படம் பிடித்துள்ளது என்று சுவீடன் விமானப் படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

சுவீடன் மற்றும் பின்லாந்து நாடுகள் நேட்டோவில் இணைய முற்பட்டால் அவற்றின் மீதும் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரஷ்ய அதிபர் புடின் கூறியிருந்த சமயத்தில் இந்த வான் எல்லைமீறல் நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள சுவீடன் விமானப் படைத் தளபதி, நாங்கள் எங்கள் ஆள்புல எல்லையைப் பாதுகாப்பதில் மிக விழிப்பாக இருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார். (அ-எ)

## விமல்...

எரிசக்தி அமைச்சராக இதுவரை உதய கம்மன்பில செயற்பட்டிருந்த நிலையில், தற்போது காமினி லொக்குகே எரிசக்தி அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். காமினி லொக்குகே இதுவரைகாலம் மின்சக்தி அமைச்சராகப் பதவி வகித்திருந்தார்.

மின்சக்தி அமைச்சராக பவித்ரா வன்னியாராச்சி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதுவரை போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பதவி வகித்திருந்தார்.

இதேவேளை விமல் வீரவன்ஸ வசமிருந்த கைத்தொழில் அமைச்சு அவரிடமிருந்து பிடுங்கப்பட்டு, எஸ்.பி. திஸாநாயக்கவிடம் அந்த அமைச்சுப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்ட உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோருக்கு வேறு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை என்று தெரிகின்றது.

ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-44)


## VACANCY
### அலுவலக உதவியாளர் (Office Assistant)


கொழும்பினை தலைமையகமாகக் கொண்ட பிரபல கல்வி நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர் (பெண்) தேவை. சுயவிபரத்தினை 07.03.2022 நேரடியாக கையளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். க.பொ.த (சா.த) தகைமை. வயது 30 இற்குள் ஆங்கில, கணினி அறிவு விரும்பத்தக்கது. சம்பளம் 25000.00 லிருந்து வழங்கப்படும்.

**074 287 5219**

(CS 18679) (4/6)


## காணவில்லை

தலைமன்கலட்டி தெல்லிப்பளைப்பகுதியில் கடந்த (28.02.2022) திங்கட்கிழமை முதல் **சோமசுந்தரம் உதயகுமார் (740483129V)** என்பவரை காணவில்லை. காண்பவர்கள் தகவல் தந்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.



**குறிப்பு:-** ❖உயரம் - 5.8 அடி
❖நீலக்கலர்சேட் அணிந்திருந்தார்.

**தொடர்பு : 077 087 2182, 077 356 1007**

## கண்ணீர் அஞ்சலி



எமது சபையில் கடமையாற்றும்

**அமரர் யேசுராசா டனால்ராஜன்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தவிசாளர், செயலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்


## 2022 A/L DAY CLASS

பௌதிகவியல்
English and தமிழ் மூலம்
Mr.M.Karunanithy B.Sc (Spl)
ஆரம்பம்: Sat-11.30AM (05.03.2022)
❖ஏனைய பிரிவுகள் நடைபெறுகின்றன

வெங்கடேசர் லேன், SCIENCE Hall அருகில் (077 618 3064)

## இலசவ ஆங்கில, கணினி வகுப்புக்கள்

க.பொ.த (உ/த) 2021 பரீட்சைகளிற்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்

பிரிவு 36

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Singala
- Diploma in Political Science
- Diploma in Psychology & Counselling

■காலம்:- 3 மாதங்கள் ■சான்றிதழ் வழங்கப்படும்.

ஆரம்பம்:
05,06/03/2022 , 10.00AM

குறிப்பு
♦மாணவர்கள் விரும்பியகற்கைகளை தொடர முடியும்.
♦அச்சடித்த பாடக்குறிப்புகள்
♦மாதாந்த மதிப்பீடுகள்.

(CS 18678) (4/6)

IPS to Your Future
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 434 0229
076 685 2529


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



தோற்றம் 27 . 07 . 1938
மறைவு 02 . 02 . 2022

கடந்த 02.02.2022 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர்**
## சின்னத்தம்பி முருகர் நாகமுத்து

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.03.2022) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (05.03.2022) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஊர் வணிகன்பற்று,
இயக்கச்சி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

மலர்வு 27 . 10 . 1940
உதிர்வு 01 . 03 . 2022



### திருமதி பாலசரஸ்வதி இராசரத்தினம்

தென்மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதி, ஆவரங்காலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. பாலசரஸ்வதி இராசரத்தினம் அவர்கள் கடந்த (01.03.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - சிவபாக்கியம் தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற இராசரத்தினம் அவர்களின் அன்பு துணைவியும், காலஞ்சென்ற இராஜலிங்கம்(லிங்கம்) மற்றும் இராஜமலர் (மலர்), காலஞ்சென்ற அமுதலிங்கம் (அமுதன்) மற்றும் சாந்திமலர் (சாந்தி), நித்தியமலர் (நித்தி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவமலர், பாஸ்கரன் (தம்பி), வனஜா, இராஜரத்தினம், காந்தீபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கே.எஸ்.ரகு செல்வராணி, குணநாதன் (குணம்), காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் சற்குணநாதன் சிவபாக்கியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுதர்ஜனா, தவராஜசேகரம், இரட்ணசோதி, நிர்மலாதேவி, குணரூபா மற்றும் காலஞ்சென்றவர்களான இராஜதுரை, சேனாதி இராசா, பாக்கியம், தங்கலட்சுமி, தங்கராசா, இராசய்யா ஆகியோரின் அன்பு மைத்துனியும், றிஷானி, தர்சன், தர்ஷிகா, தீபிகன், துவாரகன், நர்த்திகன், கவிஷன், தீப்தி, ஷகித் ஆகியோரின் பேர்த்தியும் அபிஷா, அபிஷேக் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2022) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கருதடி ஆவரங்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால்.
075 551 5599
077 116 2479
தகவல் :
குடும்பத்தினர்

(CS 18671) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கொண்டுவரப்படும் பியூஸ்லஸின் பூதவுடல்

யாழ்ப்பாணம், மார்ச் 4

இலங்கை கால்பந்தாட்ட வீரரான மன்னாரைச் சேர்ந்த யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படவுள்ளது. வல்வெட்டித்துறை வல்வெட்டி கருணாநிதி சனசமூக நிலையத்தில் காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை அவரது பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

இலங்கை கால்பந்தாட வீரரான யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ் மாலைதீவு கழகம் ஒன்றில் விளையாடி வந்த நிலையில் கடந்த சனிக்கிழமை உயிரிழந்தார். அவரது உயிரிழப்பு தொடர்பில் உரிய காரணம் கண்டறியப்படவில்லை. இந்த நிலையில் பியூஸ்லஸின் பூதவுடல் நேற்று முன்தினம் பின்னிரவு விமானம் மூலம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு நீர்கொழும்பு மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கையளிக்கப்பட்டது. உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் அவரது பூதவுடல் அஞ்சலிக்காக நேற்று இரவு 10 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணிவரை நீர்கொழும்பு - கொழும்பு முதன்மை வீதியில் அமைந்துள்ள வெஸ்டன் புலோறிஸ் மண்டபத்தில் வைக்கப்பட்டது.

இன்று அதிகாலை அவரது வாழ்விடமான வல்வெட்டித்துறைக்கு எடுத்துவரப்பட்டு நாளை காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை அவரது பூதவுடல் அஞ்சலிக்காக வல்வெட்டித்துறை, வல்வெட்டி- கருணாநிதி சனசமூக நிலையத்தில் வைக்கப்படவுள்ளது. மாலை 4 மணிக்கு மன்னாருக்கு பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படவுள்ளது. சாதனை வீரர் பியூஸ்லஸின் பூதவுடல் ஊர்வலத்தில் வடமாகாணத்தின் சகல கழகங்களின் வீரர்களும் தங்கள் கழகத்தின் சீருடையுடன் மோட்டார் சைக்கிளில் பயணிக்கவுள்ளனர்.

இன்று இரவு அவரது பிறந்த இடமான மன்னார் பனங்கட்டிக்கொட்டு கிழக்குக்கு எடுத்துச்செல்லப்பட்டு, அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. மார்ச் 7ஆம் திகதி அஞ்சலி உரைகளுடன் இறுதி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. அன்றைய தினம் தலைமன்னார் வீதியிலுள்ள மன்னார் புனித செபஸ்தியார் தேவாலய சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-இ)

## மோதிவிட்டு தப்பிய வாகனம் இளைஞர் பலி

முல்லைத்தீவு, மார்ச் 4

கனகராயன்குளம், ஏ-9 வீதியில் நடந்த விபத்தில் மல்லாவியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மல்லாவி வடக்கைச் சேர்ந்த மரியநாயகம் சகாயரூபன் (வயது-39) என்ற இளைஞரே விபத்தில் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து கடந்த 27ஆம் திகதி நடந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரை வீதியால் பயணித்த வாகனம் ஒன்று மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது என்று கூறப்படுகின்றது. விபத்தில் சிக்கிய இளைஞர் வீதியோரம் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் மீட்கப்பட்டு மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(எ-19)

## நெடுங்கேணி விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி வீதியில் நடந்த விபத்தொன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து கடந்த முதலாம் திகதி இரவு நடந்துள்ளது. இளைஞர் பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது என்று கூறப்படுகின்றது.

ஒட்டுசுட்டான், பெரிய இத்திமடுவைச் சேர்ந்த ப.அலைக்சன் (வயது-31) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் உடல் உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(எ-19)


## ஏற்றம் கண்டு போற்றுகின்றோம்



இன்று (04.03.2022) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 35 ஆவது பட்டமளிப்பு விழாவில் உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தைச் சேர்ந்த எங்கள் கணித பாடஆசிரியர்

திரு. F.அருட்செல்வன்

அவர்கள் கல்வியியல் முதுமாணி (Master of Education) பட்டத்தைப் பெற்றுக் கொள்வதையிட்டு அவரை வாழ்த்தி வணங்குகின்றோம்.

Best Wishes

ஆசானால் உயர்வுபெற்ற
பொறியியல் பீட மாணவர்கள்,
மொறட்டுவ பல்கலைக்கழகம்.

(CS 18662) (3/6)



## Distributors wanted

We are leading manufacturers of high quality organic agricultural products in the North. We want to appoint distributors for our promising, proven products.

**விநியோகஸ்தர்கள் தேவை**

வட இலங்கையின் முதல் தரமான எமது இயற்கை விவசாய உற்பத்திகளுக்கு விநியோகஸ்தர்கள் தேவை.

மண்புழு உரம் (Vermicompost), பூச்சி விரட்டிகள் (Pesticides), வளர்ச்சி ஊக்கிகள் (Growth promoters), பயிர்ப் பைகள் (Grow Bags).

இயற்கை விவசாயத்துக்கான சந்தை துரித வளர்ச்சி நிலையில் உள்ளது. ஏற்கனவே இயங்கும் உங்கள் விநியோக நடவடிக்கைகளோடு இணைத்துக் கொள்ளவோ, அல்லது புதிதாகத் தொடங்கவோ விரும்பினால், இது ஒரு அரிய சந்தர்ப்பம்.

MAVAI

திருநாவுக்கரசு நினைவு
மாதிரிப் பண்ணை, மாவிட்டபுரம்
077 055 3143 slstrust@hotmail.com



## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.

ஒரு சதுர அடி - 50ரூபாய்

தொடர்புகளுக்கு : 077 334 1281

(CS 18221) (3/6)


## பொது அறிவித்தல்

சிவகுரு நந்தகுமாரன் (க.சீ இல: N 5082610) இவரது தத்துவகாரன் கமலாசினி ஒழுங்கை, சரசாலை தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த நவரத்தினம் சதீஸ்வரன் (தே.அ.அ.இல : 792522637V) ஆவார். யாழ்ப்பாண நீதிமன்ற பிரிவிடல் வழக்கு இறுதி பிரிவிடல் தீர்வைப்படியும் (வ.இல. 56) கொழும்பு பிரசித்த நொத்தாரிஸ் சீ.பொ.சிவஞானம் முன்பாக 2011 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 10 ஆம் திகதியில் 1703 ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதிப்படி சிவகுரு நந்தகுமாரன் "வண்ணான் வளவு" நிலப்பரப்பு 1 குளி 12.18 வட்டார இல.23 ஆதனவரி இல. 846 யாழ்ப்பாண மாநகரசபை ஆதனம் தொடர்பானது என்ற விஸ்தீரணமுடைய ஆதனத்துக்கு சொந்தக்காரன் ஆனார். மேற்படி ஆதனத்தை வேறு சிலர் மோசடி செய்யப்பட்ட தத்துவப்பத்திரத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டு மீண்டும் விற்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். எனவே நான் குறித்த ஆதன மோசடிக்கெதிராக வழக்கு தொடர வேண்டி உள்ளதால் குறித்த ஆதனத்தை யாரும் கொள்வனவு செய்யவேண்டாமென பொது மக்களை வேண்டுகின்றோம்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

தத்துவகாரர்
நவரத்தினம் சதீஸ்வரன்
(NIC 792522637 V)

(CC 18669) (3/6)


## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல நிறுவனங்களிற்கு வேலையாட்கள் தேவை.
விற்பனைப் பிரதிநிதி ஆண் / பெண்
கணக்கு உதவியாளர் பெண்
காசாளர்
வீட்டுத் தேவைக்கு சாரதி

தொடர்புக்கு: 074 004 9933

(CS 18667) (3/6)



## வேலையாட்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படும் மொத்த சில்லறை விற்பனை நிலையத்திற்கு கணக்காளர் மற்றும் உதவியாளர் தேவை.

தொடர்புக்கு: 077 322 2834

(CS43326) (3/6)


## வலிகாமம் வடக்கு பிரதேச சபை – காங்கேசன்துறை
## பகிரங்க ஏல விற்பனை.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பொருட்கள் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. இப்பொருட்களை அலுவலக நேரங்களில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 03.00 மணிவரை மட்டுமே பார்வையிட முடியும்.

இடம் : தலைமை அலுவலகம், வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)

காலம் : 21.03.2022 (திங்கட்கிழமை)

நேரம் : முற்பகல் 10.30

குறிப்பு : ஏலவிற்பனையில் பங்கு பற்றும் ஏலதாரர் மீளளிக்க கூடியதான பிணைப்பணம் ரூபா. 1000.00 செலுத்தப்பட வேண்டும்.

04.03.2022


சோ.சுகிர்தன்
தவிசாளர்.
வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை

(IN 16939) (3/6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 12 . 1948



மறைவு 02 . 03 . 2022

### ஐயாத்துரை கெங்காதரன்

சுன்னாகம் தெற்கு (பழைய பொலிஸ் நிலையம் அருகாமை கே.கே.எஸ் வீதி) யை பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கு கடவைப்புலம் என்னும் இடத்தை வசிப்பிட மாகவும் கொண்ட ஐயாத்துரை கெங்காதரன் அவர்கள் நேற்று முன்தினம் (02.03.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை- நீலமணியின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பு - சின்னம்மாவின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், ரேவதி, றேணுகா (கனடா), ரமேஸ், காலஞ்சென்ற ஐங்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற திலகவதி, சறோஜினிதேவி (கனடா), விஜயலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலீபன் (டோகா), ஜேம்ஸ்திரவியம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஐங்கயன், ஜோனா (கனடா), கிலக்சனா, டிலிசா, ஆரபி, சரணியா, தர்சிகன், தனுஜா ஆகியோரின் அன்புப் பேரனாரும், அஜிஸ் இன் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் எதிர்வரும் (07.03.2022) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானதிற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கடவைப்புலம்,
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

தகவல் : குடும்பத்தினர்
077 743 3628

(CS 18670) (3/6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 09 . 1955



மறைவு 02 . 03 . 2022

### பொன்னுத்துரை சிறீகரன்

(ஓய்வுபெற்ற உப அதிபர், யா/சென். ஜோன்ஸ் கல்லூரி,
முன்னாள் ஆசிரியர், ஏஞ்சல் இன்டர்நெஷனல் பாடசாலை)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிறீகரன் அவர்கள் நேற்று முன்தினம் (02.03.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை-பரஞ்சோதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் யோகரட்ணம் அவர்களின் அருமை மருமகனும், ரஜனி (ஓய்வுபெற்ற உப அதிபர் யா/ ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், ரகுராஜ் (ஆராய்ச்சி உத்தியோகத்தர், தேயிலை ஆராய்ச்சி நிலையம், தலவாக்கலை), ரூபினி (சுற்றாடல் உத்தியோகத்தர், மத்திய சுற்றாடல் அதிகார சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிருதிவி (பொறியியலாளர், நீர் வழங்கல் அமைச்சு, கிளிநொச்சி) அவர்களின் அன்பு மாமனாரும், ரஞ்சிதசோதி (கனடா), ஞானாம்பிகை (மலேசியா), கருணாநிதி (UK), செல்வதி (கனடா), பவானி (கனடா) காலஞ்சென்ற சின்னத்தம்பி ஆகியோரின் அருமைச் சகோதரனும், ரஞ்சிற் (USA) அவர்களின் அருமை மைத்துனரும், சந்திரகுமார் (ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/சென். ஜோன்ஸ் கல்லூரி)-சசிகலா அவர்களின் சம்பந்தியும், யுஹாசினியின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2022) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"விஜயாபதி"
கல்லூரி ஒழுங்கை
மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்
021 225 5647
ரஜனி-0777743276

(CS 18...)

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 - 04 - 1957



மறைவு 03 - 03 - 2022

### பாஸ்கரலிங்கம் சத்தியபாமா

பாணாவெட்டி தொல்புரம் மேற்கு சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பாஸ்கரலிங்கம் சத்தியபாமா அவர்கள் நேற்று (03.03.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - இராசம்மா தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - அன்னம்மா தம்பதிகளின் மூத்த மருமகளும், சிற்றம்பலம் பாஸ்கரலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சேந்தனன் (லண்டன்), ஜனார்த்தனன் (சிங்கப்பூர்), நிலானி (ஆசிரியர்-ஓமந்தை மத்திய கல்லூரி), ஆகியோரின் அன்பு தாயாரும், காலஞ்சென்ற அம்பலவாணர் சந்திரகுமார், திருவரங்கன் சற்குணவதி, அம்பலவாணர் லீலாவதி, அம்பலவாணர் லோகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சேந்தனன் - ஜனனி மற்றும் ஜனார்த்தனன் - ஜெயமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், சேந்தனன் தட்சனா அவர்களின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பாணாவெட்டி
தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.


077 347 5061

தகவல்
குடும்பத்தினர்

(CS 18640) (3/6)

## மரண அறிவித்தல்

மலர்வு 04 - 04 - 1990



உதிர்வு 26 - 02 - 2022

அமரர்

### யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ்

மன்னாரைப் பிறப்பிடமாகவும் 'ராஜஸ்தான்" கருணாநிதி சனசமூக நிலையம் வல்வெட்டியை வசிப்பிடமாகக் கொண்ட இலங்கை உதை பந்தாட்ட தேசிய அணியின் பின்கள வீரருமான யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ் அவர்கள் கடந்த (26.02.2022) சனிக்கிழமை மாலைதீவில் அகால மரணமானார்.

அன்னார் லக்சனாவின் அன்புக் கணவரும், அஸ்வந்தின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் அன்னாரின் இல்லத்தில் இன்று (04.03.2022) வெள்ளிக்கிழமை நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் அஞ்சலிக்காக மன்னாருக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், விளையாட்டுத்துறை நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"ராஜஸ்தான்",
வல்வெட்டி.

076 652 1790

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸிலின்...

மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. இந்த அமைச்சரவை மாற்றம் பங்காளிக்கட்சிகளிடையே பெரும் கொதிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், கொழும்பு அரசியலில் எதிர்வரும் நாள்களில் பெரும் திருப்பங்கள் நிகழக்கூடும் என்று கூறப்படுகின்றது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகளும் இணைந்து இன்று ஊடக சந்திப்பொன்றை நடத்தவுள்ளன என்றும், அதில் பங்காளிக்கட்சிகளின் முடிவு வெளியிடப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாகக் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. முக்கியமாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளிடையே கடும் அதிருப்தி நிலவுகின்றது. நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச தவறான வழியில் அரசாங்கத்தை வழிநடத்துகின்றார் என்று பங்காளிக்கட்சிகள் கருதுகின்றன.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ ஆகியோர் அமைச்சுப் பதவிகளை வகித்தபோதும் அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பகிரங்கமாக விமர்சித்து வந்தனர். எரிசக்தி அமைச்சராகப் பதவி வகித்த உதய கம்மன்பில, நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பாக கடும் அதிருத்தியடைந்திருந்ததுடன், அரசாங்கம் முன்னுரிமை அடிப்படையில் செயற்படத் தவறியிருந்தது என்றும், உண்மைகளை மக்களிடம் இருந்து மறைத்து வருகின்றது என்றும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கான யோசனைகள் அடங்கிய தேசிய வேலைத்திட்டம் ஒன்றை 11 அரச பங்காளிக்கட்சிகள் கொழும்பில் நேற்றுமுன்தினம் வெளியிட்டிருந்தன. அந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் விமல் வீரவன்ஸ, அத்துரலிய ரத்ன தேரர் உள்ளிட்டோர் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவை வெளிப்படையாகவே விமர்சித்து உரையாற்றியிருந்தனர்.

அதன்பின்னர் ஜனாதிபதி தலைமையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்றக்குழுக் கூட்டமும் நேற்று அவசரமாகக் கூடியது. அதில் விமல், கம்மன்பில போன்றவர்களை நீக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. அதையடுத்தே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அமைச்சுப் பதவிகளில் மாற்றம் செய்யும் முடிவுக்கு வந்தார் என்று தெரியவருகின்றது.

நாடு பெரும் நெருக்கடி நிலையில் உள்ளபோது, அரசாங்கம் தற்போதும் அரசியல் இலாப நோக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உதய கம்மன்பில போன்றோர் உண்மை நிலைமைகளை மக்களுக்கு வெளிப்படுத்துவதால் அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் உள்ள ஆதரவு குறைந்துவிடும் என்பதாலேயே இந்த அமைச்சரவை மாற்றங்கள் அவசரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நாடுதற்போதிருக்கும் நிலையில் அமைச்சர்களை மாற்றுவதால் எந்தப் பயனும் கிட்டப்போவதில்லை என்றும், இது முற்று முழுதாக அரசாங்கத்தின் அரசியல் ஆதாய நடவடிக்கை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ- எ-44)

## இலங்கையின்...

சபைக்கும், சர்வதேச சமூகத்துக்கும் இது தொடர்பில் ஒரு பொறுப்பு உள்ளது. இலங்கை ஐக்கிய நாடுகளின் சர்வதேச உடன்படிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளது. அத்தகைய உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவது இலங்கையின் பொறுப்பாகும். அதைச் செய்ய தவறுவது தற்போது நிலவும் தண்டனையின்மையை உறுதி செய்வதாகவே அமையும்-

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அந்த அறிக்கைக்கான இலங்கை அரசின் பதில் அறிக்கையும் வழங்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:-

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கைக்கான இலங்கை அரசின் பதில் அறிக்கையும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் இந்த விடயம் தொடர்பில் சில முக்கியமான காரணிகளைக் குறிப்பிடுவது அவசியமாகும்.

சிறப்பு நிபுணர் குழுவின் அறிக்கையில், இறுதிப் போர்க் காலத்தில் நம்பத்தகுந்த சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்றன என்றும், அவை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, உண்மை - உறுதி செய்யப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணையாளரின் உள்ளக விசாரணையும் அதையொத்த ஒரு முடிவுக்கு வந்துள்ளது.

இலங்கையின் தற்போதுள்ள அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களும் இதுவரை எந்தவொரு விசாரணையையும் முன்னெடுக்கவில்லை. தற்போதைய அரசாங்கமானது முன்னைய அரசாங்கம் முன்மொழிந்த பொறுப்புக்கூறலை உறுதி செய்யும் வகையில் கலப்பு பொறிமுறை அடங்கிய இணை அனுசரணைத் தீர்மானத்திலிருந்து விலகிக்கொண்டது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை.

இலங்கை அரசாங்கமானது சுதந்திரம் அடைந்தது முதல் நீண்டகாலமாக ஆழமான தண்டனையின்மை கலாசாரத்தில் ஊறியுள்ளது. இது தமது அரசியல் பலத்தை தொடர்ந்தும் தக்க வைப்பதற்காக சிங்கள -பௌத்த பேரினவாதத்துக்கு ஆதரவளிக்கும் முகமாக உள்ளக வாக்குறுதிகளை மதிக்காமலும் அதன் விளைவாக கொடுத்த வாக்குறுதிகளை செயற்படுத்துவதிலும் சரியான முடிவுகளை எடுப்பதிலும் அல்லது வேறெந்த ஒரு விடயத்திலும் தீர்மானம் எடுக்கும் நிலைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

அனைத்து அரசாங்கங்களும் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்காக பேரினவாதத்தை ஆதரிக்கும் கொள்கைகளை முன்னிறுத்தி [illegible]. இது இலங்கை நா[illegible] பாதிப்புக்களை கொண்டு வந்துள்ளதுடன் ஒரு மித்த இலங்கை நாட்டின் மக்களையும் இது பாதித்துள்ளது. உண்மை நிலைமையை சிங்கள - பௌத்த மக்களுக்கு எடுத்துக் கூறினால் அவர்கள் நிலைமையை புரிந்து கொள்வார்கள், ஆனால் ஒருசில சிங்களத் தலைவர்களை விட ஏனையவர்களுக்கு அதைச்செய்வதற்கு தைரியம் இல்லை. இலங்கை முகங்கொடுத்துள்ள வரலாறு காணாத பிரச்சினைக்கும் மீண்டெழுந்து வரமுடியாத நிலைமைக்கும் இதுவே பிரதான காரணமாகும்.

இதேவேளை - ஆயுதமேந்தாத பாதிப்புக்குள்ளான தமிழ் மக்களின் நிலைமையைக் குறிப்பிடுவது முக்கியமானதாகும். இவர்களில் பெரும்பாலானோர் போரால் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டவர்கள். இன்னும் பலர் பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்தவர்கள்.

மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டு பாதிப்படைந்த இந்த மக்கள் மனித உரிமை சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டுகிறார்கள். இவர்கள் பழிவாங்கலை நாடவில்லை, மாறாக பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மீள நிகழாமை, மற்றும் தொடரும் மனித உரிமை மீறல்களைத் தடுத்தல் போன்றவற்றை உறுதி செய்ய வேண்டும் என்றே வேண்டுகின்றனர்.

உண்மை - உறுதி செய்யப்படாமல் நீதி நிலைநாட்டப்பட முடியாது. இலங்கை ஐக்கிய நாடுகளின் சர்வதேச உடன்படிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளது. அத்தகைய உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவது இலங்கையின் பொறுப்பாகும். அதைச் செய்ய தவறுவதானது தற்போது நிலவும் தண்டனையின்மையை உறுதி செய்வதாகவே அமையும்.

தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு, ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் மற்றும் சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் போன்றன இலங்கையில் எது நடந்தாலும் அது ஒரு உள்ளக நிகழ்வாகவும், இறையாண்மை தொடர்பான விடயமாகவும் அதில் வெளி தலையீடுகள் இருக்க முடியாது எனவும் எண்ணுவதற்கு தூண்டுகிறது. இலங்கையின் தண்டனையின்மை கலாசாரமானது சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுசெல்ல வேண்டிய தருணத்தை எட்டியுள்ளது.

சொந்த மக்களது இறையாண்மை மதிக்கப்பட்டு அவர்கள் சுய மரியாதை மற்றும் கௌரவம், சமத்துவம் மற்றும் நீதி மேலும் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களில் இருந்து பாதுகாக்கப்படுகின்றபோது தான் ஒரு நாட்டின் இறையாண்மை புனிதத்துவம் பெறுகின்றது என்பதனைக் குறிப்பிட வேண்டும். ஆனால், இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் இத்தகைய நிலைமை இல்லாத நிலையில் அரைவாசிக்கும் மேலதிகமானவர்கள் கடந்த தசாப்தங்களில் பல்வேறு நாடுகளில் குடியேறியுள்ளனர்.

இந்த நிலைமை தொடர்ந்தால், செழுமையான மொழியையும், கலாசாரத்தையும், நாகரிகத்தையும், பாரம்பரியத்தையும் கொண்ட தமிழ் மக்கள் இலங்கையில் இல்லாமற் போய்விடுவார்கள். தமிழ் மக்கள் தமது பூர்வீகமான வடக்கு- கிழக்கு பிரதேசங்களில் ஒன்றிணைந்த பிரிவுபடாத இலங்கையில், அர்த்தமுள்ள அதிகாரப் பிரயோகத்துடன் தொடர்ந்தும் வாழ விரும்புகிறார்கள். இது உறுதி செய்யப்படவேண்டியது அடிப்படையாகும்.

தொடர்ந்துவந்த இலங்கை அரசாங்கங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்மீது குற்றஞ்சாட்டுகின்றன. ஆனால், சுதந்திரத்துக்குப் பின்னர் தமிழ் மக்களுக்கெதிரான கலவரங்கள் இடம்பெறாது இருந்திருந்தால், தமிழ் மக்களை இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினர் பாதுகாத்திருந்தால், இலங்கைப் பிரதமர்களிடையேயும் தமிழ்த் தலைவர்களிடையேயும் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால் தமிழ் மக்கள் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் தோன்றியிருக்க மாட்டார்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபைக்கும், சர்வதேச சமூகத்துக்கும் இது தொடர்பில் ஒரு பொறுப்பு உள்ளது. சமாதானமும், மீள நிகழாமையும் இந்த விடயங்கள் யதார்த்தமாக தீர்க்கப்படவேண்டும் என வலியுறுத்துகின்றன - என்றுள்ளது. (எ-இ)

## இலங்கையின் எதிர்...

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை தெரிவித்துள்ளது.

தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு இலங்கையின் பொதுக்கடன் அதிகரித்துள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தில் ஸ்திரதன்மையை ஏற்படுத்திக்கொள்வதற்காகவும், கடனை குறைத்துக் கொள்வதற்காகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறையொன்றை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் சர்வதேச நாணய நிதியம் ஆலோசனை வழங்கியுள்ளது.

இலங்கை தொடர்பான விசாரணை பெறுபேற்று அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை, இலங்கையுடன் கருத்துக்களை பரிமாற்றிக் கொள்ளும் நடவடிக்கைகளை நிறைவு செய்துள்ளது என்றும் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

## அழகியல்...

பரீட்சையின் அழகியற்கலைப் பாடத்துக்கான பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டுள்ளன.

பரீட்சைப் பெறு பேறுகளை https://www.doenets.lk/examresults என்ற இணையத்தளம் ஊடாக அறிந்துகொள்ள முடியும் என்றும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## தொடரும்...

ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதிக்குள் 5 மணிநேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றும், மாலை 6 மணி முதல் இரவு 11 மணிவரையான காலப்பகுதிக்குள் இரண்டரை மணிநேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## “நன்றி!” ...

ளார்.

பேஸ்புக்கில் தனது பதிவொன்றின் ஊடாகவே அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களான கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் கடந்த காலங்களில் அரசாங்கத்தின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்து வந்த நிலையில், ஜனாதிபதி தனது அதிகாரத்தை பயன்படுத்தி நேற்று அவர்கள் இருவரையும் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கியிருந்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு பேஸ்புக்கில் வெளியிட்ட அறிக்கையை மேற்கோள்காட்டி, விமல் வீரவன்ஸ நன்றி! என்று சிங்களத்தில் பதிவிட்டுள்ளார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு எதிரான பேரணி நடக்கும்!

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்

**கொழும்பு, மார்ச் 4**

**எத்தனை தடை முயற்சிகளை எடுத்தாலும் அரசுக்கு எதிரான பேரணியை நிச்சயம் நடத்தியே தீருவோம் என்று தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியில் நாடாளுமன்ற உறுப்பினரான நளின் பண்டார.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்காக நாம் முன்னெடுத்துள்ள முயற்சியின் விளைவாக எதிர்வரும் 29ஆம் திகதி அநுராதபுரத்தில் மிகப்பெரும் பேரணியை நடத்தவுள்ளோம்.

இந்தப் பேரணியைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கின்றது. எப்படியான தடைகளைப் போட்டாலும் பலவந்தமாகவேனும் பேரணியை நடத்துவோம். எம்மால் தேர்தல்களை நடத்த முடியாது. ஆயினும் நாம் அரசாங்கத்தை வீழ்த்த மக்களைஅணிதிரட்டுவோம் - என்றார். (ம-ரி)

## தொழில் முயற்சியாளர் வர்த்தகச் சந்தை

சாவகச்சேரி, மார்ச் 4

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேச பெண் தொழில் முயற்சியாளர்களின் வர்த்தகச்சந்தை, எதிர்வரும் 16 ஆம் திகதி தென்மராட்சிப் பிரதேச செயலக முன்றிலில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் சந்தையில், பிரதேச பெண் தொழில் முயற்சியாளர்களின் ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14-9)

## விடுமுறையில் வந்த சிப்பாய் மாரடைப்பால் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 4

விடுமுறையில் வீட்டுக்கு வந்த இராணுவச் சிப்பாய் மாரடைப்புக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. அச்சுவேலி தெற்கு, நாவற்காட்டைச் சேர்ந்த நாகரத்தினம் விவேக் (வயது-29) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் வழமைபோன்று நேற்றுமுன்தினம் இரவு உணவு அருந்திவிட்டு உறக்கத்துக்குச் சென்ற நிலையில், காலை எழவில்லை. அதையடுத்து அவர் உடனடியாக அச்சுவேலி பிரதேச மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அவர் ஏற்கனவே உயிரிழந்தமை மருத்துவர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்த சிப்பாய், கிளிநொச்சிப் பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் பணியாற்றுகிறார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-23)

## ஆங்கில தின போட்டிகள்

பாடசாலை மட்ட ஆசிரியர் தினப் போட்டிகள் மார்ச் மாதமும், வலய மட்ட ஆங்கில தினப் போட்டிகள் மே மாதமும் நடைபெறவுள்ளதால், யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் விடுமுறைக் காலத்தில் தமது ஆங்கில ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு போட்டிகளுக்கான பயிற்சிகளைப் பெறமுடியும் என்று யாழ்ப்பாணக் கல்லூரி ஆங்கில மொழித்துறைத் தலைவர் வெற்றிவேல் சக்திவேல் தெரிவித்துள்ளார். (எ-இ)

## மின்தடைக்கு எதிர்ப்பு; யாழில் போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 4

மின்சாரத் தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து மெழுகுவர்த்தி மற்றும் டோர்ச் லைட் ஏந்தி யாழ்ப்பாணத்தில் நேற்று இரவு போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஏ-9 வீதியில் செம்மணி வரவேற்பு வளைவுப் பகுதியில் ஒன்றுகூடியவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தற்பொழுது நாட்டில் பரவலாக பல மணி நேர மின்சாரத் தடை அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் நிலையில், அதனால் மக்களுக்கு ஏற்படுத்தும் பாதிப்புக்களை வெளிப்படுத்தும் வகையில் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (எ-26,27)



## யாழ்ப்பாணம் வருகிறார் நாமல்

யாழ்ப்பாணம், மார்ச் 4

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச நாளை யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் சுதந்திரக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி நாளை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியின் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வதற்காகவே விளையாட்டுத்துறை அமைச்சர் யாழ்ப்பாணம் வரவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

**Physics Day Class - A/L 2022**
ஆரம்பம்: 05.03.2022 Sat 7.00 p.m
(Sat, Sun, Tue, Thur 7 - 9 p.m)
ஆசிரியர் : திரு. ஆ. ஸ்வெல்மன் B.Sc. PGDE
இடம் : HAC சித்தன்கேணி (CS 18661) (3/6)
T.P : 077 611 6724

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் நாவற்குழியில் 60 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- A9 வீதியில் இருந்து 150M தூரம்
- லங்கா அசோக் லேடன் வாகனவிற்பனை நிலையத்திற்கு அருகாமையில்
- நாவற்குழி சந்தியிலிருந்து 500 M தூரம்
- யாழ். பஸ் நிலையத்திலிருந்து 8 KM தூரம்
- 18 அடிப்பாதையுடன் இயற்கை சூழல்
- நன்னீர்ச்சூழல்
தொடர்பு :
குரு - 077 6234 204, 077 2880 152, 076 6583 621,077 9116 983

**வேலையாட்கள் தேவை**
ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள அரைக்கும் ஆலை (Grindingmaill) ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த வேலை ஆட்கள் தேவையாக உள்ளது. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். (CS 186804/6)
077 700 7756

**பணிப்பெண் தேவை**
ஏழாலை வடக்கில் உள்ள வீடொன்றில் தங்கி நின்று பார்வை இழந்த வயோதிப பெண்மணியை பராமரிக்க பணிப்பெண்கள் தேவை. வந்து போகக்கூடியவர்களும், தங்கி நிற்கக் கூடியவர்களும் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித்தீர்க்கலாம். (CS 43307) (4/6)
077 197 0065

**கல்வி நிலைய தளபாடங்கள் உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு**
தரமான மலிவான கல்வி நிலைய உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு
- மேசைகள் மற்றும் வாங்குகள்
- Cupboard
- Air Conditioners
- Computer tables
- CCTV cameras
- Photo Copier (Toshiba 2309)
- பிளாஸ்ரிக் கதிரைகள்
(CS 18674) (4/6)
077 602 0376

## மரண அறிவித்தல்



### சண்முகநாதன் மங்கையர்க்கரசி (வேவி/மம்மி)

யாழ். சரவணை கிழக்கு வேலணையைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாக வும் கொண்ட சண்முகநாதன் மங்கையர்க்கரசி கடந்த (28.02.2022) திங்கட்கிழமை லண்டனில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா, பொன்னாச்சி தம்பதிகளின் கடைசி மகளும், காலஞ்சென்ற இராமலிங்கம், கமலம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகநாதன் (திருகோணமலை துறைமுக அதிகார சபை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கமலாதேவி, பத்மாவதி, சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை, அப்புத்துரை, லலிதாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், குணேஸ்வரி, காலஞ் சென்ற தெய்வநாயகி, கந்தசாமி ஆகியோரின் பாசமிகு அண்ணியும், பாவுறாஜ்-பாவு சித்திரவேல் (சுவிஸ்), ஜஜிகலா (சசி - கனடா), ஹஜினாகலா- கயிலிவறாஜ்- (கோபு-ராஜ்), காலஞ்சென்ற புவிராஜ், கவிராச்(கவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயலட்சுமி, காலஞ்சென்ற சதாரூபலட்சுமி, சாந்தரூபலட்சுமி ஆகியோரின் அன்பு சிறிய தாயாரும், றஜீவன், கேமரூபி (சுவிஸ்), இரமணேஸ்வரன் (கனடா), பரராஜசிங்கம், நிலானி, பாலஜீத்தா, பாலரயன், சிவரயன், சிவகயன் ஆகியோரின் அன்பு மாமியும், சிந்துஜா, லினியா, ஹிசாந்த், ஹயேந்த், ஹரேந்த், விற்றேஷ், சயன், அகழ்யா, லனுஜா, அகத்தியா, விஷ்ருதி, விஷ்ருதா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை 9:00 மணிமுதல் 11:30 மணிவரை RAVIDASS Hall (Shri Guru Ravidass) 28, Carlyle Road, Manor Park, London E12 6BN பார்வைக்க வைக்கப்பட்டு பின்னர் 12:00 மணி முதல் 1:00 மணி வரை City of London Cemetery and Crematorium Aldersbrook Road, Manor Park, London, E12 5DQ தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு**

| | | |
|---|---|---|
| **வாவு - மகன்** | * Home : + 41447807193 | * Mobile : + 41 76 584 81 52 |
| **இரமணேஸ்வரன் - மருமகன்** | * Mobile : + 15149418807 | * Home : + 514 739 4089 |
| **பரராஜசிங்கம் - மருமகன்** | * Mobile : + 447950458884 | |
| **கோவு (ராஜ்) - மகன்** | * Mobile : + 447956182450 | |
| **கவி - மகன்** | * Mobile : + 447960412227 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.